அண்ணா பல்கலைக் கழகம்

வளர்தமிழ் மன்றம்

அறிவியல் யுகத்திற்குத் தமிழ் கருத்தரங்கு

தமிழ் எழுத்துச் சீரமைப்பு : குழு அறிக்கை

1989

அண்ணா பல்கலைக் கழகம்

வளர்தமிழ் மன்றம்

அறிவியல் யுகத்திற்குத் தமிழ்

கருத்தரங்கு

தமிழ் எழுத்துச் சீரமைப்பு :

குழு அறிக்கை

1989

1. பின்னணி

அண்ணா பல்கலைக் கழகம், அதன் "வளர் தமிழ் மன்றத்தின்" சார்பில், பாரதி அறக்கட்டளையின் கீழ், அறிவியல் யுகத்திற்குத் தமிழ் என்ற தலைப்பில் 1988 ஆகஸ்ட் 6, 7, தேதிகளில் ஒரு கருத்தரங்கை நடத்தியது. பல பல்கலைக் கழகத் துணைவேந்தர்கள், பல்கலைக் கழகத் தமிழ்த் துறைப் பேராசிரியர்கள், தமிழறிஞர்கள், தமிழ் வளர்ச்சித் துறையைச் சார்ந்த அரசு அலுவலர்கள், பத்திரிகையாசிரியர்கள் ஆகியோர் பங்கேற்றனர். இக் கருத்தரங்கிற்கு இலங்கை அமைச்சர் திரு. அ. அமிர்தலிங்கம் தலைமை தாங்கினார். தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு. சி. சுப்ரமணியம் துவக்கவுரையாற்றினார். அண்ணா பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் வா.செ. குழந்தைசாமி பரிந்துரைகளையும், தீர்மானங்களையும் தொகுத்தளித்தார். தவத்திரு. குன்றக்குடி அடிகளார் முடிவுரை நிகழ்த்தினார். கருத்தரங்கின் நிகழ்ச்சிநிரல், பங்கேற்ற பேராளர் பட்டியல் ஆகியன இணைப்பு - 4 இல் கொடுக்கப்பட்டுள்ளன. அந்தக் கருத்தரங்கில், கீழ்க்கண்ட பொருள்கள் பற்றிய கருத்துரைகள் வழங்கப்பட்டன. அவை விரிவாக விவாதிக்கப்பட்டன.

1. செம்மொழிகள் வரிசையில் தமிழ்
   (Tamil as a Classical Language)
2. தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்கள் - மொழி பெயர்ப்பு
3. இக்காலத் தமிழ் இலக்கணம்
4. தமிழ் ஒலிபெயர்ப்பு - தரப்படுத்தம்
5. தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்
6. தமிழ்க் கலைச் சொல்லாக்கம் - தரப்படுத்தம்

மேற்கண்ட தலைப்புகளில் உருவாக்கப்பட்ட பரிந்துரைகட்கும் தீர்மானங்கட்கும் செயல் வடிவம் கொடுப்பதற்கான திட்டத்தைத் தயாரிப்-பதற்குக் கீழ்க்கண்ட தலைப்புகளில் நான்கு குழுக்கள் அமைப்பது என்று முடிவு செய்யப்பட்டது.

1. செவ்வியல் இலக்கியங்கள் - மொழி பெயர்ப்பு
2. இன்றைய தமிழுக்கு இலக்கணம்
3. i. எழுத்துச் சீரமைப்பு
   ii. ரோமன் வரிவடிவத்தைப் பயன்படுத்துவதில் ஒருமைப்பாடு
4. தமிழ்க் கலைச் சொற்கள் - தரப்படுத்தம்

மேலே கண்ட குழுக்களை அமைக்கும் பொறுப்பைக் கருத்தரங்கில் பங்கு பெற்ற பேராளர்கள் கீழ்க்கண்ட உறுப்பினர்களைக் கொண்ட உயர் மட்டக் குழுவின் பொறுப்பில் விட்டனர்.

<u>உயர்மட்டக் குழு உறுப்பினர்கள்</u>

1. திரு சி. சுப்ரமணியம் — தலைவர்
   தலைவர்
   தமிழ் வளர்ச்சிக் கழகம்
   சென்னை

2. திரு. அ. அமிர்தலிங்கம்
   செயலர், தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி
   இலங்கை

3. இணைப்பாளர்
   உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கழகம்

4. தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர்
   தமிழக அரசு
   சென்னை

5. கருத்தரங்கில் பங்கு பெற்ற பல்கலைக் கழகத் துணை வேந்தர்கள்

   i. டாக்டர் ஆ. ஞானம்
      துணை வேந்தர்
      சென்னைப் பல்பலைக் கழகம்
      சென்னை

   ii. டாக்டர் ச. அகத்தியலிங்கம்
      துணை வேந்தர்
      தமிழ்ப் பல்கலைக் கழகம்
      தஞ்சாவூர்

iii. டாக்டர் கொ.ம. மாரிமுத்து
துணை வேந்தர்
பாரதியார் பல்கலைக் கழகம்
கோயமுத்தூர்

iv. டாக்டர் ச. முத்துக்குமரன்
துணை வேந்தர்
பாரதிதாசன் பல்கலைக் கழகம்
திருச்சிராப்பள்ளி

v. டாக்டர் இராம. சேதுநாராயணன்
துணை வேந்தர்
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
அண்ணாமலைநகர்

vi. டாக்டர் இராஜம்மாள் பா. தேவதாஸ்
துணை வேந்தர்
அவிநாசிலிங்கம் மனையியல் மற்றும் உயர் கல்வி நிறுவனம்
கோயமுத்தூர்

6. டாக்டர் வா.செ. குழந்தைசாமி — அமைப்பாளர்
துணை வேந்தர்
அண்ணா பல்கலைக் கழகம்
சென்னை

மேலே கூறப்பட்ட உயர் மட்டக்குழு 22.9.1988-இல் கூடி கருத்தரங்கின் பரிந்துரைப்படி நான்குகுழுக்களையும் நியமித்தது. தமிழ் எழுத்துச் சீரமைப்பு, ரோமன் வரிவடிவத்தைப் பயன்படுத்துவதில் ஒருமைப்பாடு என்ற இரண்டு தலைப்புகளில் அரசுக்குப் பரிந்துரை சமைப்பதற்கான அறிக்கையை உருவாக்குவதற்காகக் கீழ்க்கண்ட உறுப்பினர்களைக் கொண்ட குழுவை அமைத்தது.

<u>தமிழ் எழுத்துச் சீரமைப்புக்குழு</u>:

1. டாக்டர் வா.செ. குழந்தைசாமி — தலைவர்
துணை வேந்தர்
அண்ணா பல்கலைக் கழகம்
சென்னை

2. டாக்டர் இராம.சேது நாராயணன்
துணை வேந்தர்
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
அண்ணாமலைநகர்

3. திரு. ஐ. மகாதேவன்
ஆசிரியர், தினமணி
இணைப்பாளர்
உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கழகம்

4. திரு. ஆர்.பி. சுப்ரமணியம்
தலைவர்
இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் லிமிடெட்
சென்னை

5. டாக்டர் பொற்கோ
பேராசிரியர்
சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை

6. டாக்டர் கி. கருணாகரன்
பேராசிரியர்
பாரதியார் பல்கலைக் கழகம்
கோயமுத்தூர்

7. டாக்டர் செ.வை. சண்முகம்
பேராசிரியர்
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
அண்ணாமலைநகர்

8. திரு. கொடுமுடி சண்முகன்
செயற் பொறியாளர்
திட்ட ஆய்வுக் கோட்டம்
சேலம்

9. பேராசிரியர் கா.செ. செல்லமுத்து
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்

10. டாக்டர் பு. சுப்பராயலு
கல்வெட்டியற் துறை
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்

11. திரு. இரா. கிருஷ்ணமூர்த்தி
ஆசிரியர்
தினமலர்
161, அண்ணா சாலை
சென்னை

12. புலவர் புகழேந்தி
கமலாம்பாள் இல்லம்
வேளச்சேரி நெடுஞ்சாலை
தந்தை பெரியார் நகர்
பள்ளிக்கரணை
சென்னை

13. டாக்டர் ஆறு.அழகப்பன்
தமிழ்த்துறைத் தலைவர்
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
அண்ணாமலைநகர்

14. டாக்டர் ஆ. வேலுப்பிள்ளை
பேராசிரியர்
தமிழ்த்துறைத் தலைவர்
யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம்
இலங்கை

15. டாக்டர் சிலம்பொலி செல்லப்பன் செயலர்
இயக்குநர்; தமிழ் வளர்ச்சித்துறை
குறளகம், சென்னை

திரு. மணவை முஸ்தாபா சிறப்பு அழைப்பினராகப் பங்கேற்றார். குழு 9.11.1988, 10.12.1988, 7.4.1989 தேதிகளில் அண்ணா பல்கலைக் கழகத்தில் கூடி எழுத்துச் சீர்திருத்த மாற்றம் பற்றி விவாதித்தது.

* 10.12.1988-இல் நடந்த கூட்டத்தில் இகரம், ஈகாரம், உகரம், ஊகாரம் ஆகிய உயிர்மெய்கட்கு நான்கு குறியீடுகளின் வரிவடிவத்தை முடிவு செய்தது.
* இந்தக் குறியீடுகளை அறிமுகப்படுத்தி, தமிழ் எழுத்துச் சீரமைப்பின் அடிப்படை நோக்கங்களை விளக்கி, தினமணி இதழில் 7.02.89, 10.02.89 & 14.02.89 ஆகிய தேதிகளில் ஒரு தொடர் கட்டுரை வெளியிடப்பட்டது. வாசகர்களின் கருத்தும் கோரப்பட்டது.
* தங்கள் கருத்தைத் தெரிவித்தவர்களில் 90 சதவிகிதத்திற்கு மேலானவர்கள், கொள்கையளவில் சீரமைப்பை வரவேற்றி-ருந்தனர். இதையொட்டி வாசகர்கள் குறியீடுகள் பற்றித் தங்கள் ஆலோசனைகளை வழங்குமாறு கோரப்பட்டனர்.
* 260 வாசகர்கள் அவரவர்கள் பரிந்துரைக்கும் குறியீடுகளை வரைந்தனுப்பியிருந்தனர்.
* வாசகர்கள் வரைந்தனுப்பிய குறியீடுகளை வரிசைப்படுத்தித் தினமணி ஆசிரியர் குழுவிற்கு 7.4.1989-இல் நடந்த கூட்டத்தில் ஒரு அறிக்கை சமர்ப்பித்தார்.

எல்லாக் கூறுபாடுகளையும் ஆய்ந்து, எழுத்துச் சீரமைப்புப் பற்றிக் கடந்த காலங்களில் கூறப்பட்ட கருத்துகளையும் சீர்தூக்கி, முறையாக விவாதித்தபின், குழு தனது பரிந்துரைகளை முடிவு செய்தது. குழுவின் அறிக்கை இங்கு தரப்படுகிறது.

2. தமிழ் எழுத்துச் சீரமைப்பு - குழுவின் அறிக்கை

---

1. எழுத்துச் சீரமைப்பு: எழுத்துகளைக் குறைப்பதன்று.

'எழுத்துச் சீரமைப்பு' என்று கூறும்பொழுது நாம் எப்படிப்பட்ட மாற்றத்தை மனத்திற் கொண்டுள்ளோம் என்பதை முதலில் தெளிவுபடுத்துவது முறையாகும். எழுத்துச் சீரமைப்பு பலராலும் பரிந்துரைக்கப்பட்டு வரும் ஒன்று. பல கோணங்களில் அணுகப்படும் ஒன்று. எனவே நாம் இங்கு முன் வைக்க விரும்பும் மாற்றத்தின் பரிமாணத்தை வரையறுப்பது தவறான எண்ணங்கள் பரவுவதையும், பரப்பப்படுவதையும் தவிர்க்க உதவும்.

தமிழில் உயிர் 12, மெய் 18, உயிர்மெய் 216, ஆய்தம் 1 ஆக 247 ஒலி எழுத்துகள் உள்ளன. இவற்றுள் ஓரெழுத்தைக்கூடக் குறைப்பதென்பது நாம் இங்கு விளக்கப்போகும் எழுத்துச் சீரமைப்பின் நோக்கம் அன்று. நமது நோக்கம் தமிழ் நெடுங்கணக்கில் உள்ள 247 ஒலி எழுத்துகளை எழுதுவதற்குப் பயன்படுத்தப்படும் குறியீடுகளைக் குறைப்பு-தாகும். சான்றாகத் தமிழக அரசு 1978-79-இல் செய்த சீரமைப்பை எடுத்துக்கொள்வோம். கீழ்க்கண்ட ஏழு அடிப்படை மாற்றங்கள் செய்யப்பட்டன.

ௌ	-	ணா	ணை (old)	-	ணை
௵	-	றா	லை (old)	-	லை
ௗ	-	னா	ளை (old)	-	ளை
			னை (old)	-	னை

ண, ற, ன இவற்றின் ஆ-காரம், ண, ல, ள, ன இவற்றின் ஐ-காரம் தமிழ் நெடுங்கணக்கிலிருந்து விலக்கப்படவில்லை. அவற்றிற்கெனப் பிரத்தியேகமாக இருந்த ஏழு குறியீடுகள் விலக்கப்பட்டன. அச்சுக் கோப்பில் ஏழு குறியீடுகள் குறைந்தன. குழந்தைகள் மனப்பாடம் செய்வதில் ஏழு குறியீடுகள் குறைந்தன.

மேலும் 'கா', 'நா', 'சா' .... போன்றவை எழுதப்படுவது போலவே 'ணா', 'றா', 'னா' எழுதப்படுவதாலும், கை, நை, சை ...... ஆகியன எழுதப்படுவது போலவே ணை, லை, ளை, னை, எழுதப்படுவதாலும் தமிழ் வரிவடிவத்தில் ஓரளவு சீர்மை (Uniformity) ஏற்படுகிறது. ஆனால் தமிழ் எழுத்துகள் குறைக்கப்படவில்லை. இந்த மாற்றங்களை ஏன் செய்ய வேண்டும் என்ற கேள்வியைவிட ஏன் இவ்வளவு காலம் செய்யாதிருந்தோம் என்பதுதான் நாம் எண்ணி வியக்க வேண்டிய ஒன்று.

2. புதிய ஒலிகளைப் புகுத்துவதன்று

தமிழில் 247 ஒலியெழுத்துகள் உள்ளன. உலகின் பல மொழிகளிலும் உருவாக்கப்படும் கருத்துகளை, தத்துவங்களை, அவற்றோடு தொடர்புடைய பெயர்களைத் தமிழில் எழுதுவதற்குத் தமிழ் நெடுங்கணக்கில் இருக்கும் ஒலிகள் போதாவென்று வாதிடுவோர் உளர். இதனடிப்படையில் தான் கிரந்த எழுத்துகள் நமது முன்னோர்களால் பயன்படுத்தப்பட்டன. இன்றும் பலரால் பயன்படுத்தப்படுகின்றன. இதன் அடிப்படையில்தான் 'F' ஒலியைக் குறிக்க 'ஃப்' என்ற சேர்க்கை பயன்படுத்தப்படுகிறது. இவற்றை எதிர்ப்பாரும் உண்டு. ஏற்பாரும் உண்டு. இதுவும் ஒரு முக்கியமான பிரச்சினையே எனினும் இது நாம் எடுத்துக் கொண்ட சீரமைப்பினின்றும் வேறுபட்டது. தனிப்பட்டது. எழுத்துச் சீர்திருத்த இயக்கத்தில் இது ஒரு பகுதியன்று.

3. எழுத்துச் சீர்திருத்த இயக்கம் நீண்ட வரலாறு உடையது

தமிழ் வரிவடிவத்தில் பயன்படுத்தப்படும் குறியீடுகளைக் குறைக்க வேண்டுமென்பது ஏதோ, நேற்று எழுந்த கோரிக்கையன்று. அதற்கு அரை நூற்றாண்டு வரலாறு உண்டு.

* 1930-இல் காரைக்குடியில் இருந்து வெளிவந்த 'குமரன்' இதழில் அதன் ஆசிரியர், திரு. முருகப்பா, ணா, றா, னா, ணை, லை, ளை, னை என்ற வரிவடிவங்களைப் பயன்படுத்தி ஒரு கட்டுரையை வெளியிட்டு வாசகர் கருத்தை வரவேற்றிருக்கிறார்.

* 1933 டிசம்பர் 23, 24 தேதிகளில் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் நடந்த தமிழன்பர் மாநாட்டில் 15-ஆவது தீர்மானமாக எழுத்துச் சீர்திருத்தத் தீர்மானம் நிறைவேறியது.

* 1933-இல் தமிழ் வரிவடிவ ஆராய்ச்சி என்ற தலைப்பில் சிங்கப்பூர் தமிழ் அறிஞர் திரு. சு.சி. சுப்பையா, 'சிங்கப்பூர் முன்னேற்றம்' இதழில் தொடர் கட்டுரை எழுதினார்.

* 1935 குடியரசு இதழில் 'பெரியார் எழுத்து' என்று இப்பொழுது கூறப்படும் திருந்திய வரிவடிவத்தைப் புகுத்தித் தொடர்ந்து குடியரசிலும், பின்னர் விடுதலையிலும் பயன்படுத்தினார்.

* 1941 சனவரி 18, 19 தேதிகளில் மதுரையில் நடைபெற்ற தமிழ் இலக்கிய மாநாட்டில் எழுத்துச் சீர்திருத்தம் பற்றிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

* 1948 பிப்ரவரி 14, 15 தேதிகளில் சென்னையில் நடைபெற்ற அகிலத் தமிழர் மாநாட்டில் எழுத்துச் சீர்திருத்தம் பற்றிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டதுடன் 'எழுத்துச் சீர்திருத்தக் குழுவும்' அமைக்கப்பட்டது.

* 1950-இல் திரு. அவிநாசிலிங்கம் கல்வியமைச்சராக இருந்த பொழுது எழுத்துச் சீர்திருத்தக் குழுவை அமைத்தார்.

* உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கழகத்தின் (IATR) சார்பில் நடந்த ஒவ்வொரு மாநாட்டிலும் எழுத்துச் சீர்திருத்தம் பற்றிய ஆய்வுக் கட்டுரைகள் இடம்பெற்றன.

* 1975 பிப்ரவரி மாதத்தில் தமிழகப் புலவர்குழு உயிர்மெய் உகரம், ஊகாரம் உட்பட எழுத்துச் சீர்திருத்த ஆதரவுத் தீர்மானம் நிறை வேற்றியது. (இப்பொழுது புலவர் குழு சீர்திருத்தத்தை எதிர்க்கிறது).

* 1978-79-இல் பெரியார் நூற்றாண்டு விழாவையொட்டித் தமிழக அரசு, முதற்கட்டமாகப் பெரியார் 1935-முதல் பயன்படுத்தி வந்த வரிவடிவத்தில் "அய்" "அவ்" தவிர மற்றவற்றைச் .செயல்படுத்தியது.

* 1983-இல் சிங்கப்பூர் அரசு இச்சீர்திருத்தத்தை ஏற்றது. 1984-தை முதல் செயல்படுத்தி வருகிறது.

* 1977-ஆம் ஆண்டு தி.மு.க. தனது தேர்தல் அறிக்கையில் அறிஞர் கருத்தறிந்து எல்லோரும் ஏற்கும் வகையில் தமிழ் எழுத்துச்சீர்திருத்தம் செய்வதாக உறுதியளித்திருந்தது.

மேலே கூறப்பட்டிருப்பவை சீர்திருத்த முயற்சியில் முக்கியமான சில கட்டங்களே யாகும். முழுமையான தொகுப்பு அன்று.

4. தமிழறிஞர் பலர் பரிந்துரைத்தது

எழுத்துச் சீர்திருத்தத்தின் தேவையைப் பெரியார், இன்னும் அவரது இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமன்றித் தமிழறிஞர்கள் பலர் தொடர்ந்து எடுத்துரைத்திருக்கின்றனர். புலவர் குழந்தை, மு.வ., தெ.பொ.மீ., அ.ச.ஞானசம்பந்தன், செ.வை.சண்முகம், பொற்கோ, கொண்டல் சு. மகாதேவன், சாலை இளந்திரையன், முத்து—கண்ணப்பர், சிலம்பொலி செல்லப்பன், புலவர் புகழேந்தி, இலங்கை ஆ.கந்தையா போன்ற தமிழறிஞர்கள் பலர்; சி.சுப்ரமணியம், நா.மகாலிங்கம், ஐ.மகாதேவன், கொடுமுடி சண்முகன், இலங்கை க.சச்சிதானந்தன், வா.செ.குழந்தைசாமி, இரா.கிருஷ்ணமூர்த்தி, இலண்டன் வே.தில்லை நாயகம், மலேசியா சி. பரமானந்தம் போன்ற பிறதுறையினர் பலர் சீரமைப்பின் தேவையைக் கூறிவந்திருக்கின்றனர். எண்ணற்ற நூல்கள், கட்டுரைகள் வெளிவந்திருக்கின்றன. கி.வா.ஜ. அவர்கள்கூட, ஜனவரி 79 கலைமகள் இதழில் தமிழ் வரிவடிவத்தில் சீர்மைகாணச் சில மாற்றங்கள் தேவை என்பதைக் குறிப்பிட்டிருக்கிறார். மேலே குறிப்பிட்டுள்ளவர்களுள் இடம் பெற்றிருக்கும் தமிழ்ப் பேராசிரியர்களைத் தமிழ் தெரியாதவர்கள் என்றோ, மாற்றத்தின் விளைவுகளை அறியாதவர்கள் என்றோ கூறிவிட முடியாது. இவர்களைத் தமிழ் வளர்ச்சிக்கு எதிரானவர்கள் என்றோ, அதன் நலனில் அக்கறை இல்லாதவர்கள் என்றோ புறக்கணிக்கவும் இயலாது. 1978—இல் சில மாற்றங்களைச் செய்த தமிழக அரசும் அதை முதல் கட்டமென்றே எண்ணியது. எனவே பல அறிஞர்களால், பல்துறை விற்பன்னர்களால் நீண்ட காலமாகவே தேவை என்று உணரப்பட்டு, பேசப்பட்டு வந்த ஒரு சீர்திருத்தம் குறைந்தபட்ச அளவிற்காவது செயல் வடிவம் பெறாது இன்றும் தேங்கி நிற்கிறது. இப்போதைய முயற்சி, மிகக் குறைந்த அளவிலாவது, மிகவும் இன்றியமையாதனவாகக் கருதப்படும் மாற்றங்களையாவது செயல் படுத்துவதற்கான சில எண்ணங்களை முன்வைப்பதேயாகும்.

5. கூறப்படும் மாற்றம் புதிதன்று

முன்பு கூறியவாறு, பலரும் தங்கள் கருத்துகளைக் கூறியிருப்பதால், பலவகைப்பட்ட சீர்திருத்த யோசனைகளும் இடம் பெற்றிருக்கின்றன. மொழித்துறையில், மாற்றங்களைத் தத்துவரீதியாக மட்டும், மொழியியல் அடிப்படையில் மட்டும், அணுக இயலாது. 'மக்கள் ஏற்பு' என்ற கூறுபாடும், எந்த அளவுக்குச் செயல்படுத்த இயலும், செயல்படுத்த அரசு முன்வரும் என்பது போன்ற நடைமுறை அம்சங்களும் எண்ணப்பட வேண்டும். இனிவரும் பகுதிகளில் கூறப்படும் மாற்றங்கள், பல அறிஞர்களின் சிந்தனையில் விளைந்த கருத்துகளின் அடிப்படையில், இதுவரை அவ்வப்போது எழுதப்பட்டும் பேசப்பட்டும் வந்தவற்றின் சாரமாக, குறைந்த அளவு செய்ய வேண்டிய மாற்றம் என்ற அளவில், பரிந்துரைக்கப்படுபவையாகும். இவற்றில் தனிப்பட்டவர் கருத்து என்று சொந்தம் கொண்டாடத்தக்கது எதுவுமில்லை.

6. தேவைப்படும் சீர்மை

தமிழ் வரிவடிவம் நீண்ட கால அளவில் உருவானது. எழுதும் கருவி, எழுதப்பயன்படும் பொருள், அவ்வப்பொழுது ஏற்பட்ட கலாச்சாரத் தாக்கங்கள் இவற்றால் பாதிக்கப்பட்டது. கட்டடம் வடிவமைப்பது போன்றோ, ஓவியம் வரைவது போன்றோ, சிலை செதுக்கப்படுவது போன்றோ, ஒரு தனிநபரோ, குழுவோ திட்டமிட்டு உருவாக்கியதன்று: அது நீண்டகால அளவில் பரிணாம வளர்ச்சி பெற்ற மனிதப்படைப்பு. அத்தகைய மனிதப்படைப்புகளில் சீர்மைக் குறைவுகள் இருப்பதும், அவை காலப் போக்கில் திருத்தப்படுவதும் இயற்கையேயாகும்.

தமிழ் வரிவடிவத்தில் மாற்றம் தேவை என்பதைப் பெரியார் போன்ற புரட்சியாளர், சமுதாயச் சீர்திருத்தவாதிகள், அரசியல்வாதிகள் மட்டுமன்றி, மொழியில் மாற்றங்களை எளிதில் ஏற்கத் தயங்கும் மொழி அறிஞர்களும், மொழிப் புலவர்களும்கூட ஒத்துக் கொண்டுள்ளனர் என்பதை முன்பே குறிப்பிட்டோம். அவர்களுள் சிலர் கருத்துகளை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாகும்.

பேராசிரியர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் ஆழ்ந்த சிந்தனையாளர், ஆய்வாளர். பல ஆய்வுப் பாதைகளைத் தமிழுக்கு அறிமுகப் படுத்தியவர். தமிழின் வளத்தையும் அறிந்தவர். அதன் வருங்காலத் தேவையையும் உணர்ந்தவர். எழுத்துச் சீர்திருத்தம் பற்றி அவரது கருத்துப் பின்வருமாறு: *

"இப்பொழுது நாம் கையினால் மட்டும் எழுதி வரவில்லை. தட்டுப் பொறி கொண்டும் எழுதுகிறோம். அச்சடித்தும் வருகிறோம். அச்சில் லைனோ முதலிய முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. எவ்வளவுக்கு எவ்வளவு எழுத்து அச்சுகள் குறைவாக இருக்கின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு செலவும் குறைகிறது. விரைவாகவும் செயல்பட முடிகிறது ....

∴ ∴ ∴

......இகரத்திற்கும், ஈகாரத்திற்கும் மெய்யெழுத்தின் மேல் முறையே சுழியாத மேல் விலங்கும், சுழித்த மேல் விலங்கும் இடுகிறோம். இவற்றையெல்லாம் மேலே ஒட்டிக் கொண்டு இராதபடி தனித்து மெய்யெழுத்தின் பக்கத்திலேயே எழுதுவதனால் இகரத்திற்கு 18, ஈகாரத்துக்கு 18 என முப்பத்தாறு வேண்டியதில்லை. சுழியாத மேல்விலங்கு ஒன்று, சுழித்த மேல்விலங்கு ஒன்று ஆக இரண்டு போதும். அப்படியே கு முதலியவற்றிற்கும், கூ முதலியவற்றிற்கும் இரண்டிருந்தால் போதும்.................

∴ ∴ ∴

மெய்யெழுத்தாம் 'க்' முதலியவற்றுக்கும் 'க' முதலிய உயிர்மெய் எழுத்திற்கும் வேற்றுமை என்ன? மெய்யெழுத்தின் மேலே வரும் புள்ளியேயாம்........ இப்போது 'க்' முதலியன 18; 'க' முதலியன பதினெட்டு என்று உள்ளன. இதற்குப் பதில் புள்ளியையும் பூச்சியம் போன்ற சுழியாக, 'க' முதலியனவற்றினை அடுத்து உயர நிற்கவே அமைப்போமானால் 'க' முதலிய பதினெட்டோடு இந்தச் சுழி ஒன்றே போதும்."

----

* எழுத்துச் சீர்திருத்தம், பெரியார் சுயமரியாதைப் பிரசார நிறுவன வெளியீடு, 1973.

பேராசிரியர் மு.வ. நிதானத்திற்குப் பெயர் பெற்றவர். எதிலும் எல்லைக்குள் நின்று இயங்குபவர். அவசர அணுகு முறையினர் அல்லர். தெளிந்த நீரோடை போன்ற சிந்தனையாளர். தேவையானது, தவிர்க்க முடியாதது, அல்லது தவிர்க்கக் கூடாதது என்ற அளவில் மட்டுமே மாற்றத்தை ஏற்கும் மனநிலையினர். பழமைக்கும் புதுமைக்கும் பாலமாக நின்ற தமிழறிஞர். தமிழ் வரிவடிவத்தில் மாற்றங்களின் தேவை பற்றி அவரது கருத்துப் பின்வருமாறு:*

> ".....ஆகவே பனை ஓலையில் இரும்பாணியால் எழுதுவதற்கு உதவியாக அமைக்கப்பட்ட பழங்கால எழுத்து வடிவங்களை இனியும் போற்றிக் கொண்டிருப்பதில் பொருள் இல்லை. தட்டெழுத்துப் பொறிக்கும் அச்சுப் பொறிக்கும் ஏற்ற வகையில் அவற்றைச் சிறிது மாற்றி அமைக்க முற்பட வேண்டும். இந்த வகையான முன்னேற்றம் கருதிய சீர்திருத்தம் செய்யும் போது, கண்மூடித்தனமான பழமைப்பற்று - மொழிப்பற்று என்ற பெயராலும் - குறுக்கிடலாகாது.
>
> ∴ ∴ ∴
>
> ....கி, நி, சி... என்ற வடிவங்களைத் தட்டெழுத்திலும் அச்சிலும் கொண்டால் எத்தனை வடிவங்கள் தேவைப்படுகின்றன. ...உயிர்க் குறியீட்டைத் தனியே அமைக்கும் முறையை மேற்-கொண்டால்... பதினேழு வடிவங்கள் குறைகின்றன.
>
> ∴ ∴ ∴
>
> இவ்வாறே உ, ஊ, ஐ - முதலிய உயிர்க் குறியீடுகளைச் சேர்ப்பதிலும் துணிந்து சீர்திருத்தம் மேற்கொண்டால்தான் மொழிக்கும் சமுதாயத்திற்கும் நன்மை விளையும்."

தமிழறிஞர் கி.வா.ஜகந்நாதன்அவர்களைத் தமிழுலகில் அறியாதார் இலர். பண்டைத் தமிழில் வல்லவர்; படைப்பிலக்கியத்திலும் புகழ் பெற்றவர். பாரம்பரியத்தைப் போற்றுபவரேயன்றி, எதையும் எளிதில் புறக்கணிப்பவர் அல்லர். வாதம், எதிர்வாதம் என்ற வகைகளில் காலத்தைச் செலவிடாதவர்.

----

* எழுத்துச் சீர்திருத்தம், பெரியார் சுயமரியாதைப் பிரசார நிறுவன வெளியீடு, திருச்சி, 1973.

எழுத்துச் சீர்திருத்த இயக்கத்தில் அவ்வளவாக ஈடுபாடு காட்டியவருமல்லர். அவரும் மாற்றங்கள் தேவை என்பதை உணர்ந்து, கலைமகள் இதழில் பின்வரும் கருத்தைத் தெரிவித்திருக்கிறார். *

> "எழுத்து வடிவத்தைக் குறைத்து ஒரு சீரான குறியீடுகளை அமைக்க வேண்டுமென்ற முயற்சி பல ஆண்டுகளாக இருந்து வருகிறது...........
> ....
> உயிர் மெய்யில் கி, நி முதலிய இகரம் இணைந்த எழுத்துகளுக்குத் தனியே பதினெட்டு அச்சுகள் தேவைப்படுகின்றன. அப்படியே உயிர்மெய் ஈகாரங்களுக்கும் பதினெட்டுத் தனித்தனி அச்சுகள் வேண்டியிருக்கின்றன. அந்த இரண்டு குறியீடுகளையும் உயிர்மெய்யொடு ஒட்டாமல் காலைப் போலவும், இரு சுழிகளைப் போலவும் தனியே அமைத்தால் இரண்டே குறியீடுகள் இருந்தால் போதும். 34 வடிவங்கள் குறைந்துவிடும். . . . .
> . . . . உயிர்மெய் உகரத்தில் ஒரே சீரான குறியீடுகள் இல்லை. அவை மூன்று வேறு வடிவங்களைப் பெறுகின்றன.
> . . . . இந்தக் குறியீடுகளிலும் ஒரு சீராகவும், ஒட்டாமல் தனியே அமைவதாகவும் ஒன்று இருந்தால் பதினேழு வடிவங்கள் குறையும்..............
> .... உயிர்மெய் ஊகாரமும் இத்தகையதே."

பொதுவாக ஐரோப்பிய மொழிகளில், அரேபிய மொழிக் குடும்பங்களில் உயிர் எழுத்துகளும், மெய்யெழுத்துகளும் தான் இருக்கின்றன. உயிர்மெய் எழுத்துகட்குத் தனிவடிவம் இல்லை. "எழுத்தெனப்படுப அகர முதல னகர இறுவாய் முப்ப:தென்ப" என்றே தொல்காப்பியரும் கூறினார். ஆய்தத்தைச் சேர்த்தால் முப்பத்து ஒன்று. இவைதான் அடிப்படை ஒலியன்களாகும். 216 உயிர்மெய் எழுத்துகள், உயிரும் மெய்யும் இணைவதால் பெறப்படுவனவேயன்றிச் சார்பற்ற இருப்பு (Independent Existence) உடையவையல்ல. பதினெட்டு

----

* கி.வா.ஜகந்நாதன்: தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்: கலைமகள்; ஜனவரி, 1979.

மெய்யெழுத்துகளோடு, ஒரே சீராக 12 உயிர்க்குறியீடுகளைத் தனியாகப் பயன்படுத்தியிருப்போமானால் அதிகபட்சம் 43 குறியீடுகட்கு மிகாமல், அதற்கும் குறைவாகவே நமது வரிவடிவத்தை எந்தச் சிரமமுமின்றி நாம் உருவாக்கியிருக்கலாம். எப்படியோ, உயிர்மெய் வடிவங்களை உருவாக்குவதில் எண்ணற்ற சிக்கல்களை நாம் உருவாக்கிக் கொண்டோம்.

மொழிக்கு ஒலிதான் அடிப்படை. எழுத்துகள் ஒலிகட்கு நாம் கொடுக்கும் குறியீடுகள். இந்தக் குறியீடுகள் எளிதானவையாகவுமிருக்கலாம். சிக்கலானவையாகவும் இருக்கலாம். காலப்போக்கில் தமிழ் வரிவடிவம் சுழிகளும், கொம்புகளும், வளைவுகளும் கொண்டதாக உருவாகி, குழந்தைகள் எழுதுவதற்கும் நினைவில் வைத்துக்கொள்வதற்கும் கடினமானதாக அமைந்து விட்டது. ரோமன் வரிவடிவத்தின் பெரிய எழுத்துகளோடு ஒப்பிடும்பொழுது நமது வரிவடிவத்தின் சிக்கல்கள் புரியும்.

உயிர்மெய் எழுத்துகளில் கா, கெ, கே, கை, கொ, கோ, கௌ இவற்றில் குறியீடுகள் வலது புறம், இடது புறம், இருபுறத்திலும் எனப்பயன்படுத்தப்படுகின்றன. இது ஒரு வகையில் சீர்மைக் குறைவு என்றாலும் கொஞ்சம் சீர்மையும் இருக்கிறது.

* குறியீடுகள் மெய்யோடு பிணையாமல் தனியாக இருக்கின்றன.
* அவை வலது, இடது புறங்களில் மட்டுமே அமைந்திருக்கின்றன. மேலும், கீழும் இல்லை.

அதனால்:

* இவ்வெழுத்துகளை இரு இணை கோடுகட்குள் எழுதலாம்
* குழந்தைகள் ா, ெ, ே, ை என்ற நான்கு குறியீடுகளை மட்டும் கற்றால் போதுமானது.

ஆனால் நாம் உயிர்மெய் இகரம், ஈகாரம், உகரம், ஊகாரத்திற்கு வந்தால் பல சிக்கல்கள் எழுகின்றன. க, கி, கு, ண, ணூ இவற்றைப் படம்-1 இல் கொடுத்துள்ளோம்.



படம் - 1.

'க' இரு இணைகோட்டிற்குள் அடங்குகிறது. 'கி' எழுதுவதற்கு மேலே ஒரு தளம் தேவைப்படுகிறது. 'கு' எழுதுவதற்குக் கீழே ஒரு தளம் தேவைப்படுகிறது. 'ணூ' எழுதுவதற்குக் கீழே ஒருதளம் மட்டுமன்றிப் பக்க வாட்டில் நீள்வதால் இரண்டு எழுத்துகட்குத் தேவையான இடத்தையும் ஒதுக்க வேண்டியிருக்கிறது.

* அச்சில், கி, ஙி....னி வரை, கீ, ஙீ.....னீ வரை 36 குறியீடுகள் தேவைப்படுகின்றன.

* அதே போல கு, ஙு, சு....னு வரை, கூ, ஙூ, சூ....னூ வரை 36 குறியீடுகள் தேவைப்படுகின்றன.

உயிர்மெய் இகரம், ஈகாரம், உகரம், ஊகாரம் இந்த நான்குக்கு மட்டும் குழந்தைகள் 72 குறியீடுகளை மனப்பாடம் செய்ய வேண்டியிருக்கிறது. குழந்தைகள் கற்கும் ஆரம்ப கட்டத்தில், ஆங்கில மொழிக்கு இருக்கும் மொத்த வரிவடிவமே 26. அவற்றைப் போல் கிட்டத்தட்ட 3 பங்கு குறியீடுகளை, அவற்றைவிடக் கடினமான வரிவடிவத்தை, இந்த நான்கு வரிசைகட்குமட்டும் இளங்குழந்தைகள் மீது சுமத்துகிறோம்.

7. அண்ணா பல்கலைக் கழகக் கருத்தரங்கின் பரிந்துரை

"அறிவியல் யுகத்திற்குத் தமிழ்" என்ற தலைப்பில் அண்ணா பல்கலைக் கழக "வளர் தமிழ் மன்றம்" பாரதி அறக்கட்டளையின் கீழ் 6, 7 ஆகஸ்ட் 1988-இல் ஒரு கருத்தரங்கை நடத்தியது. இக்கருத்தரங்கு பற்றிய விவரம் முன்பே கொடுக்கப்பட்டுள்ளது. இக்கருத்தரங்கில் தமிழ் வளர்ச்சி பற்றிய பல பரிந்துரைகள், தீர்மானங்கள் ஏற்கப்பட்டன. எழுத்துச் சீரமைப்புப் பற்றிய பரிந்துரை பின்வருமாறு:

> "தமிழ் நெடுங்கணக்கில் உள்ள 247 ஒலியெழுத்துகட்கு, இன்று அச்சில் 124 (தமிழக அரசு 1978-இல் செய்த மாற்றத்திற்குப்பின்) குறியீடுகள் பயன்படுத்தப்படுகின்றன. இவை குழந்தைகள் கற்பதற்குச் சுமையாகவும் கருவிகளைப் பயன் படுத்துவதற்கு இடையூறாகவும் இருந்து வருகின்றன. ஒலி வடிவத்தில் எந்தவித மாற்றமுமின்றி, எந்த ஒலியினையும் நெடுங்கணக்கில் இருந்து நீக்காது, ஒலியன் நிலையில் எழுத்துகட்கு உள்ள மதிப்பில் எவ்வித மாற்றமுமின்றித் தமிழ் வரிவடிவத்தில் பயன்படுத்தப்பட்டு வரும் குறியீடுகளைக் குறைக்க இயலும்; குறைக்க வேண்டும் என்ற கருத்து நீண்ட நாட்களாகவே கூறப்பட்டு வருகிறது. குறைந்த அளவில் சில மாற்றங்கள் செய்யப்படலாம் என்பது பெரும்பாலான அறிஞர்களால் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒன்று. இதைச் செயல்படுத்தும் வகையில் தாமதம் செய்யாது இகர, ஈகார, உகர, ஊகார உயிர்மெய் எழுத்துகளுக்கு வலப்புறம் அமையும் வகையில் நான்கு துணைக்குறியீடுகளைப் பயன்படுத்தலாம் என்பதைக் கொள்கையளவில் ஏற்கலாம். வரிவடிவ எழில், இட அமைப்பு, மக்கள் ஏற்பதற்கேற்ற எளிமை இவற்றின் அடிப்படையில் எவ்வகைக் குறியீடுகளை மேற்கொள்ளலாம் எனப் பரிந்துரை செய்ய ஓர் அறிஞர் குழுவினை ஏற்படுத்தலாம். இக்குழுவில் தமிழக உறுப்பினர்களுடன் இலங்கை, மலேசியா ஆகிய தமிழ் கூறும் நல்உலகைச் சார்ந்த நாடுகளின் பிரதிநிதிகளும் இடம் பெற வேண்டும். இக்குழு ஓராண்டு காலத்திற்குள் தனது பரிந்துரைகளை அரசுக்கு வழங்குமாறு அறிவுறுத்தப் பெறலாம்."

மேற்கண்ட தீர்மானத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்ட இந்தக்குழு குறியீடுகளைத் தெரிவு செய்வதில் கீழ்க்கண்ட விதிமுறைகளைக் கவனத்திற் கொண்டு செயல்பட்டது.

* குறியீடு எளிதாகவும், பொதுமக்கள் எளிதில் ஏற்றுப் பயன்படுத்தக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.

* தமிழ் வரிவடிவத்தோடு இணைந்ததாகவும், வரிவடிவம் தோற்றப் பொலிவு உடையதாக இருக்க உதவுவதாகவும் இருக்க வேண்டும்.

* குறியீடு உயிர், மெய் எழுத்துகளின் பாதி அளவு அகலம் உள்ளதாக (**Half letters**) இருக்க முயல வேண்டும்.

* குறியீடுகள் இரு இணை கோடுகட்குள் அடங்குவதாகவும், தட்டச்சு, அச்சு, தொலையெழுதி ஆகியவற்றில் பயன்-படுத்தப்படுவதற்கு மட்டுமன்றிக் கையெழுத்துக்கும் ஏற்றன-வாகவும், மற்ற எழுத்துகளோடு, குறியீடுகளோடு மயங்கு-வதற்கு இடந்தராதனவாகவும் இருக்க வேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்ட விதிமுறைகளை மனத்திற்கொண்டு குழு இகர, ஈகார, உகர, ஊகார உயிர்மெய்கட்கு நான்கு குறியீடுகளைத் தேர்ந்-தெடுக்கும் முயற்சியில் ஈடுபட்டது. இதுவரை அறிஞர்கள் பலர் பரிந்துரைத்த குறியீடுகள் பற்றிச் சிந்திக்கப்பட்டது. தினமணி இதழில் 7.02.89, 10.02.89 & 14.02.89 ஆகிய தேதிகளில் தமிழ் எழுத்துச் சீரமைப்பு என்ற தலைப்பில் டாக்டர் வா.செ. குழந்தைசாமி எழுதிய தொடர் கட்டுரை வெளியிடப்பட்டது. வாசகர் கருத்துக் கோரப்பட்டது. மிகப் பெரும்-பாலோர் மாற்றத்தை வரவேற்றே எழுதியிருந்தனர். பின்னர் குறியீடுகள் பற்றிய வாசகர் ஆலோசனைகளும் கோரப் பெற்றன. ஏராளமான வாசகர்கள் தாங்கள் பரிந்துரைக்கும் குறியீடுகளை எழுதியிருந்தனர். இவற்றைத் தொகுத்து திரு. ஐராவதம் மகாதேவன் 7.4.1989-இல் நடந்த கூட்டத்தில் குழுவிற்கு அளித்தார். அவர் குறிப்பு இணைப்பு-3-இல் (பக்கம் 40) கொடுக்கப்பட்டுள்ளது.

இவையனைத்தையும் ஆய்ந்து பார்த்தபின் குழு, முதலாவது இடம் (**first preference**), இரண்டாவது இடம் (**second preference**) என்ற வகையில் இரு தொகுப்பைப் பரிந்துரைக்க முடிவு செய்தது. அவை பின்வருமாறு (படம் 2):



படம் - 2

மேலே கூறப்பட்ட குறியீடுகளைப் பயன்படுத்தினால் இகர, ஈகார, உகர, ஊகார உயிர்மெய் எழுத்துகள் கீழ்க்கண்டவாறு அமையும். முதலாவது இடம் (**first preference**) பெற்ற குறியீடுகள் பயன்படுத்தப்பட்ட வரிவடிவம் பின்வருமாறு (படம் 3):



படம் - 3

இரண்டாவது இடம் (Second preference) பெற்ற குறியீடுகள் பயன்படுத்தப்பட்ட வரிவடிவம் பின்வருமாறு (படம் 4).



படம் - 4

புதிய வரிவடிவத்தைப் பயன்படுத்தி அண்ணா பல்கலைக் கழகமும், இந்துஸ்தான் தொலையெழுதி நிறுவனமும் (**Hindustan Teleprinters Ltd.**) இணைந்து ஆங்கிலம், தமிழ் இரண்டு வரிவடிவங்களையும் கொண்ட இருமொழித் தொலை எழுதி (**Bi-lingual Teleprinter**) ஒன்றை உருவாக்கியிருக்கின்றன. அத்தொலையெழுதி மூலம் பெறப்பட்ட வரிகள் சில, மாதிரிக்காக இணைப்பு - 1 (பக்கம் 38), இணைப்பு - 2-இல் (பக்கம் 39) கொடுக்கப்பட்டுள்ளன. பரிந்துரைக்கப்பட்ட குறியீடுகளில் பொருத்தமான நான்கை ஏற்கலாம். இச்சிறு மாற்றத்தால் ஏற்படும் நன்மைகள் மிகப்பல:

* எழுபத்திரண்டு குறியீடுகட்குப் பதிலாக நான்கு குறியீடுகளைக் குழந்தைகள் மனப்பாடம் செய்தால் போதுமானது.
* அச்சில் 72 தனி எழுத்துகட்குப் பதிலாக நான்கு குறியீடுகள் மட்டுமே தேவைப்படும்.
* மெய்யெழுத்துக்கு இடும் புள்ளியைத் தவிர, தமிழ் வரிவடிவம் முழுமையாக இரு இணைகோடுகட்குள் அடங்கிவிடும். இது கணிப்பொறியில் தமிழைப் பயன்படுத்துவதற்கும், கணிப்பொறி வழி அச்சிற்கும் (**Computerised Printing**) தட்டச்சு (**Typewriter**) தொலையெழுதி (**Teleprinter**) குறிப்பாக மின்னியல் தொலையெழுதி (**Electronic Teleprinter**) ஆகியவற்றிற்கும் பெரிதும் துணை செய்யும்.
* இந்தச் சிறு மாற்றம் ஏற்கப்பட்டால், ஆங்கிலம், தமிழ் இரண்டிற்குமாகச் சேர்ந்த இருமொழித் தட்டச்சு (**Bilingual Typewriter**) இருமொழித் தொலையெழுதி (**Bilingual Teleprinter**) ஆகியவற்றை எளிதில் உருவாக்கலாம்.
* அச்சிலும் கையெழுத்திலும் வரிவடிவத்தின் தோற்றம் ஒழுங்கும் எழிலும் பெறும்.

8. வரிவடிவம் காலந்தோறும் மாறிவந்ததே

தமிழ் வரிவடிவம் ஏதோ தொன்று முதல் மாற்றமில்லாது தொடர்ந்து வரும் ஒன்றன்று. கணிசமான மாற்றத்திற்கு உட்பட்ட ஒன்று. காலத்துக்குக்

காலம் மாறி வந்த ஒன்று. சான்றாக, கி.பி. இரண்டாவது நூற்றாண்டு, கி.பி. பத்தாவது நூற்றாண்டு, கி.பி. 16-ஆவது நூற்றாண்டு ஆகிய காலப்பகுதியில் வழக்கிலிருந்த வரிவடிவங்களைக் கீழே காணலாம்.

உயிர் எழுத்துகள்



படம் - 5

மெய்யெழுத்துகள்



படம் - 6

மேலே கூறப்பட்ட கால கட்டத்திற்குப் பின்னும் 18-ஆவது நூற்றாண்டில் வீரமாமுனிவர் ஒரு முக்கியமான மாற்றத்தைச் செய்திருக்கிறார். எகர, ஏகாரம், ஒகர, ஓகாரம் கீழ்க் கண்டவாறு எழுதப்பட்டும் பதிப்பிக்கப் பட்டும் வந்தன.

தற்போது		முன்பு
எ	-	எ்
ஏ	-	எ
ஒ	-	ஒ்
ஓ	-	ஒ

புள்ளிகளை எடுத்துவிட்டு, இடது புறத்தில் குறிப்பிட்டிருப்பது போல எ, ஒ, இவற்றைக் குறிலாகவும், எகர நெடிலுக்குச் சிறு கீழ் விலங்கிட்டும், ஒகர நெடிலுக்கு ஒரு சுழியிட்டும் மாற்றத்தைச் செய்தவர் வீரமாமுனிவர்.

"மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்:
எகர, ஒகரத் தியற்கையும் அற்றே"

என்பது தொல்காப்பியம். மெய்யெழுத்துகட்குப் புள்ளிகள் இன்றும் உண்டு, ஆனால் "எகரமும், ஒகரமும் அவ்வாறே புள்ளி பெறும்" என்ற தொல்காப்பியர் விதியை நாம் கைவிட்டு விட்டோம். முன்னேற்றம் கருதிச் செய்த மாற்றம்.

உயிர்மெய் இகர, ஈகார, உகர, ஊகார எழுத்துகட்கு நாம் கூறும் மாற்றம் எந்தத் தொல்காப்பிய விதிகட்கோ நன்னூல் விதிகட்கோ புறம்பானதன்று. இன்னும் கூறப்போனால் உயிர் மெய் எழுத்தில், அகர உயிர்மெய்யிலிருந்து ஔகார உயிர்மெய் வரை அமைந்துள்ள 12 செங்குத்து வரிசைகளுள் மற்ற எட்டு வரிசைகளினின்றும் இகர, ஈகார, உகர, ஊகார வரிசை மாறுபட்டிருப்பதைத் தவிர்த்துச் சீர்மைப்படுத்த இந்த மாற்றம் உதவுகிறது. மாறுபட்டு நிற்கும் நான்கு வரிசைகளைப் படம் 7 தெளிவாகக் காட்டுகிறது.

அ	ஆ	இ	ஈ	உ	ஊ	எ	ஏ	ஐ	ஒ	ஓ	ஔ	ஃ
க	கா	கி	கீ	கு	கூ	கெ	கே	கை	கொ	கோ	கௌ	க்
ங		ஙி	ஙீ	ஙு	ஙூ							ங்
ச		சி	சீ	சு	சூ							ச்
ஞ		ஞி	ஞீ	ஞு	ஞூ							ஞ்
ட		டி	டீ	டு	டூ							ட்
ண		ணி	ணீ	ணு	ணூ							ண்
த		தி	தீ	து	தூ							த்
ந		நி	நீ	நு	நூ							ந்
ப		பி	பீ	பு	பூ							ப்
ம		மி	மீ	மு	மூ							ம்
ய		யி	யீ	யு	யூ							ய்
ர		ரி	ரீ	ரு	ரூ							ர்
ல		லி	லீ	லு	லூ							ல்
வ		வி	வீ	வு	வூ							வ்
ழ		ழி	ழீ	ழு	ழூ							ழ்
ள		ளி	ளீ	ளு	ளூ							ள்
ற		றி	றீ	று	றூ							ற்
ன	னா	னி	னீ	னு	னூ	னெ	னே	னை	னொ	னோ	னௌ	ன்

படம் - 7

9. மாற்றம் கருவிகட்காக மட்டுமன்று

மனித முன்னேற்றம் அவன் கண்டுபிடிக்கும் கருவிகளின் முன்னேற்றத்தைப் பொறுத்தே அமைந்தது. மனித முன்னேற்ற வளர்ச்சியை மூன்று பெரும் யுகங்களாகப் பிரிக்கலாம்.

1. வேளாண்மையுகம் **(Age of Agricultural Civilisation)**
2. தொழில்யுகம் **(Age of Industrial Civilisation)**
3. கல்வியுகம் அல்லது உயர்நுட்பத் தொழில்யுகம் **(Knowledge Era, or High Technology Era)**

ஏறத்தாழ 8000 ஆண்டுகட்கு முன்பு அடையாளம் தெரியாத ஒரு மேதை கண்டுபிடித்த கலப்பை காட்டுமிராண்டியாக, வேட்டையாடி, விலங்கெறிந்து வந்த மனிதன் நாகரிகம் வளர்ந்து, வேளாண்மை யுகத்தில் அடியெடுத்து வைக்க உதவியது. பதினெட்டாம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்ட நீராவி யந்திரம் தொழில் யுகத்தைத் தோற்றுவித்தது. இருபதாம் நூற்றாண்டின் மையப் பகுதியில் உருவான கணிப்பொறி கல்வியுகத்திற்குக் கால் கோள் இட்டது. கருவிகள் மனிதன் படைத்தவைதாம். ஆனால் மனிதன் தான் படைத்த கருவிகளினால் ஏற்பட்ட முன்னேற்றம், ஏற்பட்ட வசதிகள் ஆகிய-வற்றைப் பயன்படுத்துவதற்கேற்பத் தனது நடை முறையில், அணுகுமுறையில் எண்ணற்ற மாற்றங்களைச் செய்து இருக்கிறான். செய்தும் வருகிறான்.

> "இன்றைய பணிகளை இன்றைய கருவிகொண்டு செய்ய வேண்டும்.
> இன்றைய பணிகளை நேற்றைய கருவிகொண்டு செய்யும்
> இனத்தின் நாளைய வாழ்வு நசிந்துவிடும்",

இது மாற்றமில்லாத வாழ்வியல் நியதி. நாம் வளராத மொழி என்று கூறி வரும் இந்தியில் இன்று தந்தி கொடுக்கலாம். இந்தியாவில் 7000-க்கும் மேற்பட்ட அஞ்சல் நிலையங்களில், அலுவலகங்களில் இருந்து தொலையெழுதி (**Teleprinter**) மூலம் இந்தியில் செய்தியனுப்பலாம். ஆனால் தமிழ் நாட்டில் தமிழில் இன்று தந்தி கொடுக்கும் வசதி இல்லை. இலங்கையில்

தந்தி அனுப்ப மிகப் பழைய 'Morse' முறையைப் பயன்படுத்தித் தவறுகள் நிறைந்த செய்திகளைப் பரிமாறுகின்றனர். தொலையெழுதி (Teleprinter) இல்லை. தினமணி போன்று பல இடங்களிலிருந்து பதிப்பிடப்படும் நாளேட்டிற்குத் தலையங்கத்தை ரோமன் வரிவடிவம் மூலம் தான் தலைமையகத்திலிருந்து அனுப்பி வருகிறார்கள்.

இது கணிப்பொறியுகம். கணிப்பொறி பயன்படுத்தப்படாத துறைகளே இல்லை. மேலைநாடுகளில் அச்சு முழுவதும் கணிப்பொறி மயமாகிவிட்டது. தட்டச்சில் மின்னியல் புரட்சியும், கணிப்பொறிகளின் கூறுபாடும் இடம் பெற்று-விட்டன. இந்த மாற்றங்கள் நமது கதவுகளையும் தட்டிக் கொண்டிருக்கின்றன. நாம் தாளிட்டுக் கொண்டு, இருட்டறையில் வாழ இயலாது, வாழக்கூடாது.

கணிப்பொறியைப் பயன்படுத்த வேண்டுமானால் ஒவ்வொரு எழுத்தும் இயன்றவரை ஒரு குறிப்பிட்ட அளவுள்ள சதுரத்திற்குள், அல்லது நீண்ட சதுரத்துக்குள் அடங்குவதாக இருக்க வேண்டும். தமிழில் நாம் முன்பு கூறியது போல 'கி' எழுதினால் அதன் இகரக் குறியீடு (இதை மேல் விலங்கு என்கிறோம். உண்மையிலேயே இவையெல்லாம் தமிழுக்கு இடப் பட்டிருக்கும் விலங்குகள்தாம்) கட்டத்திற்கு மேலே செல்கிறது. 'கு' எழுதினால் அதன் கீழ்விலங்கு கட்டத்திற்குக் கீழே செல்கிறது. 'ணு' எழுதினால் அது இரண்டு எழுத்து நீளம் கொண்டதாக இருப்பதால் அது வலது புறத்தில் கட்டத்திற்கு வெளியே செல்கிறது. இவையனைத்தையும் கணிப்பொறியும், தட்டச்சும், தொலையெழுதியும் சமாளிக்க இயலும் என்றாலும் அது பாறாங்கல்லை இடுப்பில் கட்டிக் கொண்டு ஆற்றைக் கடக்க நீந்துவது போன்றதாகும். இன்றைய வாழ்க்கைப் போராட்டத்தில் நாம் நமக்கிருக்கும் வசதிக் குறைவுகள் பலவற்றோடு இந்தச் சுமைகளையும் தாங்கிக் கொண்டு கரை சேர இயலாது. அப்படிச் சேர்ந்தாலும் அது காலம் கடந்ததாகி விடும்.

இகர, ஈகார, உகர, ஊகார உயிர் மெய்கட்கு முன்பு கூறியுள்ள மாற்றம் குழந்தைகள், பொதுவாகத் தமிழ் கற்போர் 72 குறியீடுகளை மனப்பாடம் செய்வதற்குப் பதிலாக நான்கு குறியீடுகளை மனப்பாடம் செய்தால் போதுமானதாக்குகிறது. இந்த மாற்றங்கட்குப்பின் அச்சிற்கு 56 குறியீடுகள் வேண்டுமென்றாலும் குழந்தைகள் தமிழ் கற்க 39 குறியீடுகளை மட்டுமே மனப்பாடம் செய்ய வேண்டும். முதலாவது இடம் பெற்ற குறியீடுகளைப் பயன்படுத்தினால், தமிழ் வரிவடிவம் பின்வரும் 39 குறியீடுகளைக் கொண்டதாக அமையும்:

உயிர் எழுத்துகள்	(அ, ஆ, இ.........ஒ, ஓ)	11
உயிர்மெய்	(க, ங, ச..... ன)	18
உயிர்க்குறியீடுகள்	(ா ி ீ ு ூ ெ ே ை)	8
ஆய்தம்	(ஃ)	1
மெய்க்குறியீடு	(.)	1
		39

குறியீடுகளை இன்னும் குறைக்க, எளிமைப்படுத்த இயலும். அது நமது சமுதாயத்தின் 'ஏற்புத்தரத்தைப்' பொறுத்திருக்கிறது.

இன்று அயல் நாடுகளில் பல பகுதிகளில், இந்தியாவிலேயே மற்ற மாநிலங்களில், வாழும் தமிழர்களின் குழந்தைகள் தமிழ் கற்பதற்கு வரி-வடிவம் ஒரு தடையாக இருக்கிறது. 39 குறியீடுகள் கற்றால் போதுமானது என்று வரும்பொழுது பெரும்பாலும் அவர்கள் வீட்டில் தமிழ் பேசுவதால் எழுதப்படிக்கக் கற்றுக் கொள்வதும், தமிழ் மொழியொடு தொடர்பறாது வாழ்வதும் இயன்றதாகிவிடும்: எளிதாகிவிடும்.

கருவிகளை மட்டுமே மனத்தில் கொண்டு நாம் இந்த மாற்றங்களை வலியுறுத்தவில்லை என்பது மேலே கூறியவற்றால் விளங்கும். ஆனால் கருவிகளும் முக்கியம்; அவற்றைப் புறக்கணிக்க முடியாது. நாம் பதினெட்டாம் நூற்றாண்டு அணுகு முறைகளிலிருந்து இம்மியும் விலகாது உட்கார்ந்துகொண்டு இருபத்தோராவது நூற்றாண்டிற்குள் அடி எடுத்து வைக்க இயலாது. இந்த உண்மையை நாம் உணர வேண்டும். ஒப்ப வேண்டும்.

"மாறாத பொருளெதுவும் வளர்வ தில்லை:
வையத்தின் விதியிதற்கு மாற்றமில்லை".

இது மொழிக்கும் பொருந்தும்; வரிவடிவத்திற்கும் பொருந்தும். சமுதாயம் ஆமை வேகத்தில் நகர்ந்து முன்னேறிய காலத்தில் கூட நமது முன்னோர்கள் மாற்றத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இன்றைய வளர்ச்சி வேகம் அசாதாரணமானது.

"அரை நொடி நேரம் நின்றேன் நான்: ஆயிரம் காதம்
பின்னடைந்தேன்"

என்ற வேகத்தில் உலகம் சென்று கொண்டிருக்கிறது. இந்தக் காலத்தின் தேவைகட்கு நாம் ஈடுகொடுத்தேயாக வேண்டும்.

பெரியார் 1935-இல் நடை முறைப்படுத்திய சீரமைப்பை நாம் 43 ஆண்டுகள் -- அரை நூற்றாண்டு -- கழித்து ஏற்றுக் கொண்டிருக்கிறோம். இன்றைய உலகின் வளர்ச்சி வேகத்தில் அரை நூற்றாண்டு மிக நீண்டகாலம். அவர் செய்த சீர்மையை நம்மால் புறக்கணிக்க இயலவில்லை -- அவை

தேவையான மாற்றங்கள் என்பதால், தேவையானவற்றை உரிய காலத்தில் ஏற்றுச் செயல்படுத்தும் விழிப்புணர்ச்சி இல்லாத மக்கள் நாம் என்பதை இதன் மூலம் நிரூபித்திருக்கிறோம்.

இகர, ஈகார, உகர, ஊகாரக் குறியீடுகளின் மாற்றமும் தவிர்க்க இயலாதது. அரை நூற்றாண்டு காலமாகப் பரிந்துரைக்கப்பட்டு வருவது; இன்று வரை நாம் ஏற்கத் தயங்கி வருவது. இன்றில்லாவிட்டால் நாளை, அல்லது நாளைமறுநாள் அந்த மாற்றம் வருவதை நமது தயக்கமோ, எதிர்ப்போ தடுக்காது. ஆனால் அதுவரை நம் வளர்ச்சியைத் தடுக்கும். நம் முன்னேற்றத்தைத் தடுக்கும். ஏற்கனவே பலதுறைகளில் பின்தங்கிவிட்ட நாம் இன்னும் பின்தங்க நேரிடும்.

10. கூறப்படுவது குறைந்த பட்சமாற்றமே

எழுத்துச் சீர்மையில் ஈடுபாடு கொண்டுள்ள பல அறிஞர்கள் ஆர்வலர்கள், நாம் கூறும் இந்தச் சீரமைப்புக்கூட முழுமையாக இல்லையென்றும், அரைக்கிணறு தாண்டும் செயலாக அமைந்துவிடும் என்றும் குறைகூறக்கூடும். குறிப்பாக மெய்யெழுத்துகட்குத் தலையில் இடும் புள்ளியை, அல்லது அதற்கு ஏற்ற மற்றொரு குறியீட்டை வலது புறத்தில் இடுவது எடுத்துக் கொண்ட சீர்மையை ஓரளவு முழுமையானதாக்கும். இதனினும் சிறப்பாக, புள்ளியில்லாத க, ங, ச..............ன, ஆகியவற்றை மெய்யெழுத்துகளாக ஏற்றுக் கொண்டு, உயிர்மெய் அகரத்திற்கும் வலது புறத்தில் பொருத்தமான ஒரு குறியீட்டைப் பயன்படுத்தலாம். புள்ளியில்லாத க, ங, ச.........ன மெய்யெழுத்துகளாகப் பழைய ஏடுகளில் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. இது எண்ணத் தக்கதுதான்; ஏற்கத்தக்கதுதான். "உயிரெழுத்துகள் 12 எனினும், அடிப்படையானவை ஐந்துதான். இந்த ஐந்து எழுத்துகட்கு அமைந்துள்ள வரிவடிவத்தின் துணைகொண்டே மற்றவற்றை எழுத இயலும்" என்றும் வாதிடலாம். அப்படி எண்ணுவோரின் வாதங்கள் வலிமை வாய்ந்தவைதாம்.

ஆனால் வாழ்வுப் பிரச்சினைகள் அறிவு பூர்வமான அணுகுமுறைகளின் அடிப்படையில் மட்டுமே தீர்க்கப்படுவதில்லை. நமது அணுகுமுறைகள் உணர்வு, நம்பிக்கை (**faith**) பகுத்தறிவு இவற்றின் கதம்பம். மொழிப் பிரச்சினைகள் உணர்வு பூர்வமாகவே பெரும்பாலும் அணுகப்படுகின்றன. மாற்றங்கள் ஏற்கப்படுவது, அவற்றின் தேவை பற்றிய வாதங்களின் வலிமையைப் பொறுத்து மட்டும் அமைவதில்லை. சமுதாயம் அதற்கு எந்த அளவிற்குச் சமைவாக இருக்கிறது என்பதையும் எண்ண வேண்டுவது முக்கியம்.

'ரு' என்பதை 'றா' என்று மற்ற கா, நா, சா................ போல எழுதுவதை, அரசு அதிகார பூர்வமாகச் செய்த மாற்றத்தை, அரிச்சுவடி நிலையிலிருந்து தமிழகக் குழந்தைகள் இப்பொழுது கற்றுவரும் வரிவடிவத்தை, இனி எந்த அரசு வந்தாலும், எந்தக் காரணத்தைக் கொண்டும் மாற்ற இயலாது என்ற அடிப்படைச் சீர்திருத்தத்தை இன்னும் ஏற்காத பெருமக்கள் உள்ள சமுதாயத்தில் நாம் வாழ்கிறோம். செயல்படுகிறோம். இதை நாம் மறப்பதற்கில்லை. நம் நிலையை எண்ணி ஒரு பெருமூச்சுவிட்டுக் கொள்வது நமது மனத்தை அழுத்தும் பாரத்தைத் தற்காலிகமாகவாவது குறைக்க உதவும். இந்தச் சூழ்நிலையில் நடைமுறைப் படுத்துவதன் சாத்தியத்தையும் வைத்தே நாம் செயல்பட வேண்டியிருக்கிறது. இகர, ஈகார, உகர, ஊகார உயிர்மெய்களின் 72 குறியீட்டுச் சுமையைக் குறைத்தாலே நாம் மண்ணில் ஊர்ந்து செல்லும் ஒரு வாகனத்திற்கு வானில் பறக்க இறகுகள் படைத்தது போன்ற ஒரு முன்னேற்றம் ஏற்படும் என்பதில் ஐயமில்லை. 'இது போதுமா' என்று வாதிப்பதைவிட 'இதையாவது இனியும் காலதாமதம் செய்யாது, முன்புபோல இன்னொரு அரை நூற்றாண்டு கழிக்காது எப்படியேனும், எப்படியேனும் விரைவில் செயல்படுத்துவது' என்பதையே குறிக்கோளாகக் கொண்டு முயலவேண்டும்.

11. மற்றமொழியினர் செய்திருக்கிறார்கள்

இந்த நூற்றாண்டில் பண்டைப் பெருமை வாய்ந்த மொழியினரும் எழுத்துச் சீரமைப்புச் செய்திருக்கிறார்கள். பிற்காலத்தில் வளர்ந்த நவீன மொழியினரும் வரிவடிவ மாற்றங்கள் செய்திருக்கிறார்கள்.

* ஜப்பானிய மொழி, வலமிருந்து தொடங்கி, மேலிருந்து கீழாகச் செங்குத்தாக எழுதப்பட்டு வந்தது. அறிவியல் தொழில் நுட்பத்துறைக்கு இம்முறை ஏற்றதாக இல்லை. இன்று அறிவியல் துறைகள் முழுவதிலும் அது படுக்கையாக, இடமிருந்து வலமாக எழுதப்படுகிறது. இது எவ்வளவு மகத்தான மாற்றம் என்பதைச் சிறிது சிந்தித்தாலும் உணர இயலும். 'கஞ்ச்சி' (Kanji) என்பதுதான் ஜப்பானிய வரிவடிவம். அறிவியல் தொழில் நுட்பத் துறையில் மேலை நாடுகளில் ஏற்படும் வளர்ச்சியை ஜப்பானிய மொழி தன்வயப்படுத்திக் கொள்ள, நவீன கருவிகளைப் பயன் படுத்திக்கொள்ள, 'கஞ்ச்சி' வரிவடிவம் அவ்வளவு ஏற்றதாக இல்லை. எனவே கதாகானா (Katakana) உறீராகானா (Hiragana) என்ற இரு புதிய துணை வரிவடிவங்களையும் பயன்படுத்துகிறார்கள். 'கஞ்ச்சி' வரிவடிவத்தைவிட இவை இரண்டும் மிக எளிதானவையாகும். நாளுக்கு நாள் இப்புதிய வரிவடிவத்தையும் இயன்றவரை எளிதாக்கி, எண்ணிக்கையையும் கணிசமாகக் குறைத்து விட்டார்கள்.

* சீனமக்கள் ஐயாயிரம் ஆண்டுப் பாரம்பரியம் கொண்டவர்கள். மேலைநாட்டினருக்கு ஆயிரம் ஆண்டுகள் முன்பே எழுதும் தாளைக்கண்டு பிடித்தவர்கள். அறுநூறு ஆண்டுகள் முன்பாகவே அச்சடிக்கும் முறையைக் கண்டு பிடித்தவர்கள். பத்தாவது நூற்றாண்டில் சீன இலக்கியத் தொகுப்புகள் என்ற வரிசையில் 130 தொகுதிகளை, அச்சிட்டு வெளியிட்டவர்கள். 14-ஆவது நூற்றாண்டில் இருந்து, 17-ஆவது நூற்றாண்டு வரை ஆட்சி செய்த 'மிங் அரச பரம்பரையினர்' (Ming Dynasty) 'சீனக் கலைக் களஞ்சியம்' தொகுக்கும் பணியில் ஈடுபட்டுச்

சீன மொழியில் அதற்கான செய்திகளைச் சேர்த்து வைத்துச் சென்றார்கள். அவை முழுவதும் அண்மையில் 'தைவானில்' அச்சிடப்பட்டு வெளிவந்திருக்கின்றன. ஒரு தொகுதி, இரண்டு தொகுதி அன்று: 1500 - தொகுதிகள். பல்கலைக் கழக நூலகங்களில் 1-முதல் 1500 வரை எண்ணிடப்பட்டு ஒரு பெரிய அறை முழுவதும் இந்தக் கலைக் களஞ்சியத் தொகுதியே நிறைந்திருக்கும் காட்சி பார்ப்பவர்களைப் பிரமிக்க வைக்கிறது.

சீனர் இன்று 103 கோடி மக்கள். சீனா உலக வல்லரசுகள் ஐந்தில் ஒன்று. அடுத்த நூற்றாண்டில் மூன்று முக்கிய வல்லரசுகளில் ஒன்றாகச் சீனா தலையெடுக்கும் என்பது அரசியல் அறிஞர்களின் ஆருடம். உலகில் இன்று அதிகமான மக்களால் பேசப்படும் மொழி, ஆங்கிலமன்று: சீனம். ஆனால் 1949-இல் புரட்சிக்குப்பின் பதவியேற்ற சீனப் பொதுஉடமை அரசு செய்த முக்கியமான செயல்களில் ஒன்று: 1954-இல் "மொழிச் சீர்திருத்தக்குழு" - வெறும் எழுத்துச் சீர்திருத்தக் குழு மட்டுமன்று - ஒன்றை அமைத்ததுதான். அக்குழுவின் பரிந்துரைகளில் முக்கியமானது பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட எழுத்துகளைக் கொண்ட அந்த மொழியின் எழுத்துகளை, அடிப்படையாகக் கற்றுக் கொள்ளத் தேவையான 2236 எழுத்துகளுக்குக் குறைத்தது ஆகும். தாங்கள் எடுத்துக் கொண்ட எந்த ஒரு நிலையிலும் நின்று, அதை உலகும் ஏற்க வைக்கத்தக்க பாரம்பரியம், பண்பாடு, பண்டைப் பெருமை, இற்றை வலிமை, மக்கள் தொகை - அனைத்தும் கொண்ட ஓர் இனம் காலத்துக் கேற்ற மாற்றங்களை ஏற்கத் தயங்காது செயல்படும் இன்றைய சூழ்நிலையில் அரைப்புள்ளி, கால்புள்ளி மாற்றம் கூட "மரபியலுக்கு" மாறானது என்ற தத்துவத்தில் நாம் நிற்போமானால் நாம் எதிர்காலத் தலைமுறைக்குப் பெருந்தீங்கு செய்தவர்களாகிவிடுவோம்.

* ஜெர்மன் மொழி ஐரோப்பிய மொழிகளில் இன்று எல்லாத் துறைகளிலும் வளம் வாய்ந்த மொழி. உலகு முழுவதும் தனது தாக்கத்தை ஏற்படுத்தி ஐன்ஸ்ட்டினின் அறிவியலும், 19-ஆவது, 20-ஆவது நூற்றாண்டுகளின் எண்ணற்ற தொழில் நுட்பப் படைப்பும் மனித சமுதாயத்திற்கு ஜெர்மன் மொழி தந்த கொடைகள். ஜெர்மன் மொழி காத்திக் **(Gothic)**

வரிவடிவத்தில் எழுதப்பட்டுவந்தது. இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் கூட காத்திக் வரிவடிவம் தான் பயன்படுத்தப்பட்டு வந்தது. 1930 களில், இட்லர் காலத்தில் வெளிவந்த பல செய்தித் தாள்களை 'முனிச்' (Munich) நகரிலுள்ள காட்சியகத்தில் காணலாம். அவற்றில் பல காத்திக் வரிவடி-வத்திலும், சில ரோமன் வரிவடிவத்திலும் உள்ளன. இன்று ஜெர்மன் மொழி முழுமையாக ரோமன் வரிவடிவத்தை ஏற்றுக் கொண்டுவிட்டது. ஜெர்மன் மொழியின் தேவைக் கேற்ப இரண்டு எழுத்துகளை அதிகமாக ரோமன் வரிவடிவத்திற்குச் சேர்த்திருக்கிறார்கள்.

* இந்தோநேசியாவின் மொழியான 'பாஉஷா இந்தோநேஉஷியா" விற்கு, பழைய வரிவடிவத்தைக் கைவிட்டு விட்டு, ரோமன் வரிவடிவத்தையே ஏற்றுக் கொண்டுவிட்டனர். மலேசிய மொழியின் நிலையும் அப்படியே.

* இந்தியத் துணைக்கண்டத்தில் மலையாள மொழியில் அச்சுக் கோப்பதற்கு ஏராளமான குறியீடுகள் தேவைப்பட்டன. கேரள அரசு திரு.கே.என்.குஞ்சன்பிள்ளை தலைமையில் 1967-இல் ஓர் எழுத்துச் சீர்திருத்தக் குழுவை அமைத்தது. அக்குழு, அச்சிலும் தட்டச்சிலும் பயன்படுத்தப்படும் குறியீடுகளில் 75 சதவிகிதத்தைக் குறைக்குமாறு பரிந்துரை செய்தது. 1969-மார்ச் 2-இல் கேரள அரசு பிறப்பித்த ஆணையில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

"In 1967, Government appointed a Committee with Shri Soornad P.N.Kunjan Pillai, Editor, Malayalam Lexicon as convener to advise them on the question of reformation of Malayalam script. The committee in its report has made recommendations to reduce 75% of the total number of existing characters in printing and typing".

இந்தப் பரிந்துரையை ஆய்ந்த மற்றொரு குழு 1969-இல் சிறு மாற்றங்களோடு குஞ்சன்பிள்ளை குழுவின் பரிந்துரையை ஏற்றுக்கொண்டது. இன்று 450-குறியீடுகட்கும் சற்று அதிகமான குறியீடுகளிலிருந்து விடுபட்டு, 90-க்கும் சற்றுக் கூடுதலான குறியீடுகளே போதும் என்ற நிலைமை உருவாகியிருக்கிறது.

* இந்தி மொழியில் 'ஏ' காரம் 'ஓ' காரம் இருக்கின்றன. ஆனால் 'எ' கரம், 'ஒ' கரம் இல்லை. அறிவியல் துறையில் 'எ' கரம் 'ஒ' கரம் இரண்டிற்கும் புதிய குறியீடுகளைப் பயன்படுத்துவது என்ற முடிவுக்கு வந்திருக்கிறார்கள். இந்திமொழியில் 'ழ','ள' ஆகிய ஒலிகள் இல்லை. இந்த ஒலிகட்கு இப்பொழுது ஆட்சிமொழி இந்தி வரிவடிவத்தில் இரண்டு குறியீடுகளைப் புதிதாக உருவாக்கியிருக்கிறார்கள்.

* அரபு மொழி சார்ந்த வரிவடிவங்களைக் கொண்ட சோமாலிய மொழி, சுவாகிலி மொழி இரண்டுக்கும் இப்பொழுது ரோமன் வரிவடிவம் ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டது.

சான்றுகளை அடுக்கிக் கொண்டே போகலாம். புண்டைப் பெருமை வாய்ந்த மொழிகளும் அண்மைக்காலத்தில், தேவைகருதி, எழுத்துச் சீர்திருத்தம் செய்திருக்கின்றன: நவீன காலப்பகுதி மொழிகளும் செய்திருக்கின்றன. இதில் வியப்பதற்கு எதுவுமில்லை. மாற்றம் வளர்ச்சியின் ஒரு பகுதி. மாறாத ஒன்று வளராது: வளராத ஒன்று வாழாது.

12. நன்மைகள் பல: தீமைகள் இல்லை

வரிவடிவமாற்றத்தால் ஏற்படும் நன்மைகள் அளவிறந்தன. 'எழுத்துச் சீரமைப்பு' அளவில் ஆலின் விதை போன்றது. பயனில் வேரும் விழுதுமாகப் பரவும் வளர்ச்சி இயற்கையைத் தன்னுள் கொண்டது.

* தமிழ் மக்கள் ஒரு மொழியினர். பல நாட்டினர். எல்லா நாட்டிலும் சிறுபான்மையர். பல நாடுகளில், பல நகரங்களில் சிறு தொகையினராகவும் வாழ்கிறார்கள். இவர்கள் அனைவரும் தமிழர்களாக, தமிழ்ப் பண்போடு பாரம்பரியத்தோடு தொடர்புடையவர்களாக, தமிழ் இலக்கியச் செல்வத்திற்குத் தாங்களும் சொந்தக்காரர்களாக வாழ வேண்டுமானால் வருங்காலத் தலைமுறையினரான அவர்களது குழந்தைகள், அவர்கள் வாழும் நாட்டின் மொழிமட்டுமன்றித் தமிழையும் கற்பது எளிதாக்கப்பட வேண்டும். 39-வரிவடிவங்களைக் கொண்டு தமிழைக் கற்க இயலுமாயின் மொழித் தொடர்பு நீடிப்பதும் நிலைப்பதும் எளிதாகும்.

* மும்மொழிக் கொள்கை ஏற்கப்பட்டு, அது வட மாநிலங்களில் செயல்படுத்தப்படுமாயின், வரிவடிவ எளிமை காரணமாக, மற்ற மொழிகளைவிடத் தமிழ் அதிக மாணவர்களால் கற்கப்படுவது சாத்தியமாகும்.

* 1981 - கணக்கெடுப்புப்படி தமிழ் எழுதப்படிக்கத் தெரிந்த-வர்கள் 46 சதவிகிதம். பெரும்பான்மையினர் எழுதப்படிக்கத் தெரியாதவர்கள். தமிழ் பேசவும், பேசுவதைப் புரிந்து கொள்ளவும் தெரிந்த மக்களுக்கும் அவர்கள் மொழிக்கும் இடையே நிற்கும் தடைச்சுவர் வரிவடிவம்தான். அதைத் தாண்டுவதற்கான தடைகள் குறைக்கப்பட்டால் கற்பது எளிதாகும். கற்பதற்கான காலம் குறையும்.

* நாம் வாழ்வது அறிவியல்யுகம். உண்மையிலேயே இந்த நூற்றாண்டின் மத்தியில்கூட நாம் எண்ணிப்பார்த்திராத வேகத்தில் அறிவு வளர்ச்சி முன்னேறுகிறது. நாம் அதை முழுமையாகப் பயன்படுத்த வேண்டும். கல்வித்துறையில், வணிகத்தில், பொருளாதார வளர்ச்சியில் உலக நாட்டு மொழிகள் பயன்படுத்தும் எல்லாக் கருவிகளையும் நாமும் பயன்படுத்த வேண்டும். பயன்படுத்துவது எளிதாக்கப்பட வேண்டும்.

எழுத்துச்சீர்மை மேலே கூறிய எல்லா வகையிலும் துணை நிற்கும். அதனால் தமிழுக்கு இன்றைய நிலையிலோ எதிர்காலத்திலோ, எந்தத் தீங்கும், பாதகமான எந்த விளைவுகளும் நேர்ந்துவிடாது. எழுத்துச் சீரமைப்பை எதிர்ப்போர், அல்லது ஆதரிக்காதோர் இதுவரை அதனால் ஏற்படக்கூடிய தீமைகள் என்று எதையும் கூறியதில்லை. "இருப்பதை எந்தக் காரணத்தைக் கொண்டும் மாற்றக்கூடாது" என்பது வளரும் இனத்தின் வாழ்க்கைத் தத்துவமாக முடியாது.

பழைய நூல்களைப் பயன்படுத்த முடியாது போய்விடுமே என்பர் சிலர். அப்படிப்பட்ட அச்சம் தேவையில்லை. இங்கு கூறப்படும் மாற்றங்கள் மிக எளியவை. படித்தவர்கட்கு ஒரு முறை அறிமுகப்படுத்திவிட்டால் புரிந்து கொள்ளத்தக்கவை. எனவே அவர்கட்கு இரு வரிவடிவங்களும் தெரியும்.

இளந்தலைமுறையினர் பழைய நூல்களைப் படிக்கும் நிலைமை வர ஒரு பத்தாண்டு தேவைப்படும். சோவியத் ஒன்றியம் ஓர் ஆண்டிற்கு 83000 நூல்கள் போல வெளியிடுகிறது. அண்மையிலுள்ள சிறிய நாடான ஜப்பான் 44000 நூல்கள் வெளியிடுகிறது. அதனினும் முக்கியமாக, வளரும் நாடான தென் கொரியா ஆண்டுக்கு 35400 நூல்கள் வெளியிடுகிறது. தமிழில் கண்டிப்பாக மறுபதிப்புகள் வெளியிடப்பட வேண்டும் என்ற அளவுக்குத் தரமுடைய நூல்கள் இருபதாயிரம் கூடத் தேறாது. அவற்றை எளிதாக அதிகமாகப் போனால் நான்கு ஐந்து ஆண்டுகளில், அரசோ அல்லது பல்கலைக் கழகங்களோ வெளியிட்டுவிடலாம். மற்ற நூல்கள் தேவைக்கேற்ப பதிப்பகங்களால் வெளியிடப்பட்டுவிடும். ஓலையில் எழுதப்பட்ட காலத்தில் தமிழ் வரிவடிவத்தில் அடையாளம் காண முடியாத மாற்றங்கள் ஏற்பட்டும் கூடத் தமிழ் நூல்கள் வரிவடிவ மாற்றத்தால் வழக்கொழிந்துவிடவில்லை. இன்று இந்தியாவிலேயே நிமிடத்துக்கு 6000 பக்கங்கட்கு மேல் அச்சிடலாம் என்னும் அறிவியல் யுகத்தில் இருக்கிறோம். எனவே இவையெல்லாம் பிரச்சினைகளே அல்ல.

மனித வரலாறு இதுவரை கண்டிராத ஒரு வளர்ச்சிக் காலத்தில் வளர்ச்சி வேகத்தில் நாம் இருக்கிறோம். அந்த வளர்ச்சிப் பயணத்தில் வளர்ந்த நாடுகளோடு வளரும் நாடுகளோடு தோளோடு தோள் சேர்த்து நடைபோடத் தவறிய, தயங்கிய இனத்தை வையம் புறக்கணித்துவிடும். வரலாறு மறந்துவிடும். இரண்டாயிரம் ஆண்டுக்கு மேற்பட்ட நமது வரலாற்றில் இதுவரை காணாத சோதனைக் காலத்தில் தமிழினம் இருக்கிறது. நம்மை எதிர்நோக்கும் பிரச்சினைகள் பெரியவை: நமக்கிருக்கும் வசதிகள் பெருமைப்படத்தக்கவையாக இல்லை. நாம் செய்ய வேண்டிய பயணம் பெரியது: செல்ல வேண்டிய பாதை நெடிது. வளர்ந்த இனத்தின் மொழிகள் எங்கோ இருக்கின்றன. நாம் எங்கோ இருக்கிறோம். எங்கிருக்கிறோம்

என்பது பற்றிய தெளிவு இன்றி, என்ன செய்ய வேண்டும் என்பது பற்றிய முடிவு இன்றி, காலத்துக்கேற்காத அணுகுமுறையில், கவைக்குதவாத வாதங்களில், நேரத்தையும், நினைவையும் செலவழித்துக் கொண்டிருக்கிறோம். நாம் கட்டிய சிறைகளில் நம்மை அடைத்து வைத்திருக்கிறோம். நமது பல மயக்கங்களிலிருந்து நம்மை விடுவித்துக் கொண்டு, கண்களை அகலத்திறந்து, 21-ஆவது நூற்றாண்டு புலர்வதைப் பார்க்க வேண்டும். நாம் மிகத் தொலைவில் நின்று கொண்டிருக்கிறோம் என்பதையும் உணர வேண்டும். இது நமது அவசரத்தேவை.

இணைப்பு - 1

அண்ணா பல்கலைக் கழகமும் இந்துஸ்தான் தொலையெழுதி நிறுவனமும். (**Hindustan Teleprinters Limited**) இணைந்து உருவாக்கிய இருமொழித் தொலையெழுதியில் (**Bi-lingual Teleprinter**) பயன்படுத்தப்பட்டிருக்கும் தமிழ் வரிவடிவம்:

புதிய குறியீடுகள்

இகரம் ஈகாரம்

உகரம் ஊகாரம்

தமிழ் எழுத்துகள்

உயிர்:-

அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ ஃ

மெய்:-

க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம் ய் ர் ல் வ் ழ் ள் ற் ன்

உயிர்மெய்க் குறியீடுகள்:-

ா(ஆ) ி(இ) ீ(ஈ) ு(உ) ூ(ஊ) ெ(எ) ே(ஏ) ை(ஐ)

ெxா(ஒ) ேxா(ஓ) ெxள(ஔ)

மாதிரிக்காக ஒரு பத்தி

அறிவியல், தொழில் நுட்பம், மற்றும் கல்வியறிவுத் துறைகளில் நூல்களை உருவாக்குவதென்பது தமிழில் ஒரு புதிய இலக்கியத் துறையைப் படைப்பதற்கு ஒப்பாகும். எனவே அதற்கென ஒரு நடை, ஒரு பாரம்பரியம் உருவாக வேண்டும். பல நூல்கள், பல வல்லுனர்களால் எழுதப்பட்ட பின்னர்தான் ஒரு துறையில் இலக்கியம் உருப்பெறுகிறது. அறிவியல் தமிழ் ஆக்கம் ஒரு நெடிய பயணம்; இதில் நாம் காடும் தாண்ட வேண்டியிருக்கும்; கடலும் தாண்ட வேண்டியிருக்கும்; கால்நடைப்பயணமும் தேவை; கப்பலும் தேவை. வழிக்கேற்ற வாகனத்தை நாம் ஏற்க, உருவாக்க நமது மொழிக்கொள்கை இடந்தர வேண்டும்.

அண்ணா பல்கலைக் கழகமும் இந்துஸ்தான் தொலையெழுதி நிறுவனமும் (**Hindustan Teleprinters Limited**) இணைந்து உருவாக்கிய இருமொழித் தொலையெழுதியில் (**Bi-lingual Teleprinter**) பயன்படுத்தப்பட்டிருக்கும் தமிழ் வரிவடிவம்:

புதிய குறியீடுகள்

இகரம் ஈகாரம்

உகரம் ஊகாரம்

தமிழ் எழுத்துகள்

உயிர்:-

அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ ஃ

மெய்:-

க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம் ய் ர் ல் வ் ழ் ள் ற் ன்

உயிர்மெய்க் குறியீடுகள்:-

ா(ஆ) ி(இ) ீ(ஈ) ு(உ) ூ(ஊ) ெ(எ) ே(ஏ) ை(ஐ)

ெxா(ஒ) ேxா(ஓ) ெxள(ஔ)

மாதிரிக்காக ஒரு பத்தி

அறிவியல், தொழில் நுட்பம், மற்றும் கல்வியியல் துறைகளில் நூல்களை உருவாக்குவதென்பது தமிழில் ஒரு புதிய இலக்கியத் துறையைப் படைப்பதற்கு ஒப்பாகும். எனவே அதற்கென ஒரு நடை, ஒரு பாரம்பரியம் உருவாக வேண்டும். பல நூல்கள், பல வல்லுனர்களால் எழுதப்பட்ட பின்னர்தான் ஒரு துறையில் இலக்கியம் உருப்பெறுகிறது. அறிவியல் தமிழ் ஆக்கம் ஒரு நெடிய பயணம்; இதில் நாம் காடும் தாண்ட வேண்டியிருக்கும்; கடலும் தாண்ட வேண்டியிருக்கும்; கால்நடைப்பயணமும் தேவை; கப்பலும் தேவை. வழிக்கேற்ற வாகனத்தை நாம் ஏற்க, உருவாக்க நமது மொழிக்கொள்கை இடந்தர வேண்டும்.

இணைப்பு - 3

தமிழ் எழுத்துச் சீரமைப்புக் குழுவின் பரிந்துரைகளை விளக்கி அண்ணா பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் வா.செ. குழந்தைசாமி எழுதிய கட்டுரை தினமணியில் மூன்று பகுதிகளாக பிப்ரவரி 7, 10, 14 தேதிகளில் வெளியிடப்பட்டது.

இக் கட்டுரையைப் பற்றி நூற்றுக்கும் அதிகமான கடிதங்கள் வாசகர்களிடமிருந்து வரப் பெற்றோம். அவற்றுள் சிலவற்றைத் தொகுத்துத் தினமணி வாசகர் மன்றப் பகுதியில் (13.3.89) வெளியிட்டிருந்தோம். அன்றே வாசகர்களின் கடிதங்களில் தெரிவிக்கப்பட்டிருந்த கருத்துகளின் மீது ஒரு தலையங்கமும் வெளியானது.

அன்றைய வாசகர் மன்றப் பகுதியில் ஒரு வரைபடத்தில் -இகர, -ஈகார, -உகர, -ஊகாரக் குறியீடுகளில் தற்போது வழங்கும் வரி வடிவங்களையும் சீரமைப்புக் குழு பரிந்துரைக்கும் புதிய வடிவங்களையும் வெளியிட்டுக் காலியிடங்களில் வாசகர் விரும்பும் வடிவங்களை எழுதியனுப்பக் கோரியிருந்தோம். இந்த வேண்டுகோளையேற்று சுமார் 300 வாசகர்கள் வரைபடத்தைப் பூர்த்திசெய்து சுருக்கமான விளக்கக் குறிப்புகளுடன் அனுப்பியிருக்கிறார்கள்.

எழுத்துச் சீரமைப்பே தேவையற்றது என்றும், உயிர்மெய் எழுத்துகளையே நீக்கிவிடலாம் என்றும், சீரமைப்புக் குழு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளாத எழுத்துகளின் மாற்றங்களைப் பற்றியும் எழுதப்பட்ட கடிதங்கள் நீங்கலாக, மற்ற 262 கடிதங்களில் வாசகர்கள் -இகர, -ஈகார, -உகர, -ஊகார உயிர்மெய்க் குறியீடுகளில் செய்யவேண்டிய மாற்றங்களைப் பற்றித் தம் கருத்துகளைத் தெரிவித்திருக்கிறார்கள்.

வாசகர்கள் அனுப்பியுள்ள 201 வரிவடிவங்களும் விளக்கக் குறிப்புகளின் சாராம்சத்துடன் சீரமைப்புக் குழுவின் பார்வைக்கு அனுப்பப்பட்டுவிட்டன. வாசகர்கள் பரிந்துரைத்திருக்கும் நூற்றுக்கணக்கான வரிவடிவங்களைத் தினமணியில் அச்சிடுவது சாத்தியமன்று. எனினும் ஒவ்வொரு உயிர்மெய்க் குறியீட்டுக்கும் வாசகர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள முதல் மூன்று வரிவடிவங்கள் இங்கு தரப்பட்டுள்ளன.

தினமணி வாசகர்களின் கருத்துகளைப் பொதுவாக இவ்வாறு சுருக்கிக் கூறலாம்:

1. எழுத்துச் சீர்மைக்கு மிகுந்த வரவேற்பு இருக்கிறது.
2. புதிய குறியீடுகள் கூடுமானவரை இப்போதுள்ள குறியீடுகளையே ஒத்திருக்க வேண்டும் என்ற கருத்துக்குப் பரவலான ஆதரவு இருக்கிறது.
3. சீரமைப்புக் குழு பரிந்துரைத்துள்ள நான்கு புதிய குறியீடுகளும் பெரும்பான்மை வாசகர்களால் வரவேற்கப்படுகின்றன.
4. புதிய -இகரக் குறியீடு இப்போதுள்ளதைப் போன்றே இருப்பதால் அதற்கு மிகுதியாக ஆதரவு கிடைத்துள்ளது.
5. -ஈகாரக் குறியீட்டில் சுழி கோட்டின் தொடக்கத்தில் இல்லாமல் இப்போதுள்ளதுபோல இறுதியில் அமையவேண்டும் என்பது பெரும்பான்மைக் கருத்தாகும்.
6. -உகர, -ஊகாரக் குறியீடுகளைப் பொருத்தவரை குழு பரிந்துரைத்த புதிய குறியீடுகளுக்கும் கிரந்தக் குறியீடுகளுக்கும் (ு, ூ) ஏறத்தாழ சமமான ஆதரவு கிடைத்திருக்கிறது. கிரந்தக் குறியீடுகளை ஆதரிப்பவர்கள் அவை இப்பொழுதே புழக்கத்தில் இருப்பதையும் அச்சு, தட்டச்சு இயந்திரங்களில் இடம்பெற்றிருப்பதையும் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். புதிய குறியீடுகளை ஆதரிப்பவர்கள் கிரந்தக் குறியீடுகளை செங்குத்தாக (புதிய மலையாள லிபியில் உள்ளவைபோன்று) எழுதினால் இடம் மிச்சமாவதுடன் தமிழ் எழுத்துகளின் வடிவமைப்புக்கு ஒத்திருக்கும் என்றும் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள்.

எழுத்துச் சீர்மைப் பணியில் தினமணி பங்கேற்க வாய்ப்பினையளித்த குழுவினருக்கும், எங்களுடைய வேண்டுகோளை ஏற்றுத் தங்கள் கருத்துகளை எழுதியனுப்பிய வாசகர்களுக்கும் தினமணி சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

குறியீடுகள்	வாசகர்கள் எண்ணிக்கை	பரிந்துரைக்கப்பட்ட வடிவங்களின் மொத்த எண்ணிக்கை
-இ	259	26
-ஈ	262	40
-உ	253	61
-ஊ	262	74

விளக்கம்: எடுத்துக்காட்டாக, -இகர உயிர்மெய்க் குறியீட்டைப் பொருத்தவரை, 259 வாசகர்கள் 26 விதமான புதிய வரிவடிவங்களைப் பரிந்துரைத்திருக்கின்றார்கள்.

வாசகர் தேர்ந்தெடுத்த வரிவடிவங்கள்

குறியீடு	பரிந்துரைகள் எண்ணிக்கை	முதல்	இரண்டாவது	மூன்றாவது
-இ	259	 (168)	 (44)	
-ஈ	262	(85)	 (46)	 (33)
-உ	253	(57)	(47)	(33)
-ஊ	262	(51)	(49)	(34)

இணைப்பு - 4

அறிவியல் யுகத்திற்குத் தமிழ்

கருத்தரங்கு

6, 7 ஆகஸ்ட் 1988

பாரதி அறக்கட்டளை

வளர் தமிழ் மன்றம்

அண்ணா பல்கலைக்கழகம்

சென்னை

அண்ணா பல்கலைக்கழகம் : வளர் தமிழ் மன்றம்

பாரதி அறக்கட்டளைக் கருத்தரங்கு

அறிவியல் யுகத்திற்குத் தமிழ்

6—8—1988

துவக்கம் : *10.00 — 11.15*

தலைமை : **திரு. அ. அமிர்தலிங்கம்**
செயலர், தமிழ் ஐக்கிய விடுதலைக் கட்சி
இலங்கை

துவக்கவுரை : **திரு. சி. சுப்ரமண்யம்**
முன்னாள் மைய அரசு அமைச்சர்

அமர்வு I : *11.30 — 12.45*

தலைப்பு : i. செம்மொழிகள் வரிசையில் தமிழ்
தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்கள் —
மொழிபெயர்ப்பு

தலைவர் : **டாக்டர் ச. அகத்தியலிங்கம்**
துணை வேந்தர், தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சை

ஆய்வுரை : i. **டாக்டர் ஜான் சாமுவேல்**
இயக்குநர், ஆசிய ஆய்வியல் நிறுவனம்
சென்னை

ii. **டாக்டர் மா. இராமலிங்கம்**
பேராசிரியர், தமிழ்த் துறை
பாரதிதாசன் பல்கலைக்கழகம்
திருச்சி

அமர்வு II : 1.45 — 2.45

தலைப்பு : **இக்காலத் தமிழ் இலக்கணம்**

தலைவர் : **பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன்**

ஆய்வுரை : **டாக்டர் கி. அரங்கன்**
பேராசிரியர், தமிழியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

பிற்பகல்

அமர்வு III : 2.45 — 4.00

தலைப்பு : **தமிழ் ஒலிபெயர்ப்பு — தரப்படுத்தம்**

தலைவர் : **திரு. எஸ். டி. காசிராஜன்**
செயலர், தமிழ் வளர்ச்சித் துறை
தமிழ்நாடு அரசு, சென்னை

ஆய்வுரை : i. **டாக்டர் பொன். கோதண்டராமன்**
பேராசிரியர், இலக்கியத் துறை
சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை

ii. **கொடுமுடி ச. சண்முகன்**
செயற் பொறியாளர்
பொதுப் பணித்துறை, சேலம்

அமர்வு IV : 4. 00 — 5.30

தலைப்பு : **தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்**

தலைவர் : **திரு. ஐராவதம் மகாதேவன்**
ஆசிரியர், தினமணி, சென்னை

ஆய்வுரை : **டாக்டர் செ. வை. சண்முகம்**
பேராசிரியர், மொழியியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

7-8-1988

அமர்வு V	:	10.00 — 11.15
தலைப்பு	:	தமிழ்க் கலைச் சொல்லாக்கம் — தரப்படுத்தம்
தலைவர்	:	டாக்டர் ச. முத்துக்குமரன் துணை வேந்தர் பாரதிதாசன் பல்கலைக்கழகம் திருச்சி
ஆய்வுரை	:	டாக்டர் இராம. சுந்தரம் பேராசிரியர், அறிவியல் துறை தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சை
நிறைவு	:	11.30 — 1.30
தலைமை	:	டாக்டர் ஆ. ஞானம் துணை வேந்தர், சென்னைப் பல்கலைக்கழகம் சென்னை
பரிந்துரைகள்	:	டாக்டர் வா. செ. குழந்தைசாமி துணை வேந்தர், அண்ணா பல்கலைக்கழகம் சென்னை
வழிமொழிதல்	:	i. டாக்டர் கொ. ம. மாரிமுத்து துணை வேந்தர், பாரதியார் பல்கலைக்கழகம் கோவை ii. டாக்டர் இராசம்மாள் பா. தேவதாஸ் துணை வேந்தர், அவினாசிலிங்கம் மனையியல் உயர் கல்வி, ஆய்வு நிறுவனம் கோவை iii. டாக்டர் இராம. சேதுநாராயணன் துணை வேந்தர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர்
நிறைவுரை	:	தவத்திரு குன்றக்குடி அடிகளார்

கருத்தரங்கில் பங்கேற்ற பேராளர் பட்டியல்

அண்ணா பல்கலைக் கழகம், அதன் 'வளர் தமிழ் மன்றத்தின்' சார்பில் பாரதி அறக்கட்டளையின் கீழ், 'அறிவியல் யுகத்திற்குத் தமிழ்' என்ற தலைப்பில் 1988 ஆகஸ்ட் 6, 7, தேதிகளில் நடத்திய கருத்தரங்கில் பங்கேற்ற பேராளர் பட்டியல்.

I. சிறப்பு அழைப்பினர்

1. திரு. சி. சுப்பிரமணியம்
முன்னாள் மைய அரசு அமைச்சர்
ரிவர்வியூ, கோட்டூர்புரம்
சென்னை - 600 085

2. தவத்திரு குன்றக்குடி அடிகளார்
குன்றக்குடி - 623 206
பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம்

3. திரு. அ. அமிர்தலிங்கம்
அறை எண் 1
அரசு விருந்தினர் இல்லம்
சென்னை - 600 005

II. பல்கலைக் கழகத் துணை வேந்தர்கள்

4. டாக்டர் வா.செ. குழந்தைசாமி
துணை வேந்தர்
அண்ணா பல்கலைக் கழகம்
சென்னை - 600 025

5. டாக்டர் ஆ. ஞானம்
துணை வேந்தர்
சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை - 600 005

6. பேராசிரியர் இராம. சேது நாராயணன்
துணை வேந்தர்
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
அண்ணாமலை நகர் - 608 002

7. டாக்டர் ச. முத்துக்குமரன்
துணை வேந்தர்
பாரதிதாசன் பல்கலைக் கழகம்
திருச்சிராப்பள்ளி - 620 024

8. டாக்டர் ச. அகத்தியலிங்கம்
துணை வேந்தர்
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர் - 613 001

9. டாக்டர் கே.எம். மாரிமுத்து
துணை வேந்தர்
பாரதியார் பல்கலைக் கழகம்
கோவை - 641 046

10. டாக்டர் இராஜம்மாள் தேவதாஸ்
துணை வேந்தர்
ஸ்ரீ அவிநாசிலிங்கம் மனையியல் உயர் கல்வி ஆய்வு நிறுவனம்
கோவை - 641 021

III. <u>பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர்கள்</u>

11. டாக்டர் சி. கருணாகரன்
பேராசிரியர்
தமிழ்த் துறைத் தலைவர்
முதன்மையர் - கலையியற்புலம்
பாரதியார் பல்கலைக் கழகம்
கோவை - 641 046

12. டாக்டர் மா. இராமலிங்கம்
தமிழ்த் துறைத் தலைவர்
பாரதிதாசன் பல்கலைக் கழகம்
திருச்சிராப்பள்ளி - 620 024

13. டாக்டர் இல.செ. கந்தசாமி
தமிழ்த் துறைத் தலைவர்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்
கோவை - 641 003

14. டாக்டர் பொன். கோதண்டராமன்
தமிழ் இலக்கியத் துறை
சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை - 600 005

15. டாக்டர் க.ப. அறவாணன்
தமிழ்த் துறைத் தலைவர்
புதுவைப் பல்கலைக் கழகம்
புதுச்சேரி - 605 001

16. டாக்டர் செ.வை. சண்முகம்
பேராசிரியர்
தமிழ் மொழியியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
அண்ணாமலைநகர் - 608 002

17. டாக்டர் ஆறு. அழகப்பன்
தமிழ்த் துறைத் தலைவர்
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
அண்ணாமலைநகர் - 608 002

18. டாக்டர் தா.வே. வீராசாமி
முதன்மைப் பதிப்பாசிரியர்
தமிழ்ப் பேரகராதி மையம்
புதிய வளாகம்
தஞ்சாவூர் - 613 005

19. டாக்டர் இராம. சுந்தரம்
அறிவியல் தமிழ்த் துறைத் தலைவர்
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர் - 613 005

20. டாக்டர் சி. அரங்கன்
மொழியியல் துறைத் தலைவர்
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர் - 613 005

21. டாக்டர் முத்துச் சண்முகம்
வருகைதரு பேராசிரியர்
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர் - 613 005

22. டாக்டர் இராதா செல்லப்பன்
உயர் விரிவுரையாளர்
அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகம்
கொடைக்கானல் - 624 101

23. டாக்டர் பொன். சௌரிராஜன்
தமிழ்ப் பேராசிரியர்
திருவேங்கடவன் பல்கலைக் கழகம்
திருப்பதி - 517 502

24. பேராசிரியர் சி. பாலசுப்பிரமணியம்
தமிழ்த் துறைத் தலைவர்
சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை - 600 005

IV. <u>கல்லூரித் தலைவர்கள்/பேராசிரியர்கள்</u>

25. டாக்டர் சே. சாதிக்
இயக்குநர்
சென்னை தொழில் நுட்பக் கல்லூரி
அண்ணா பல்கலைக் கழகம்
சென்னை - 600 044

26. டாக்டர் பா. இளங்கோ
மின்னியல் துறைத் தலைவர், மின்னியல் துறை
அண்ணா பல்கலைக் கழகம்
சென்னை - 600 025

27. பேராசிரியர் கா.மு. பாதுசா
முதல்வர்
சாகிர்உசேன் கல்லூரி
இளையான்குடி - 623 702
பொன் முத்துராமலிங்கம் மாவட்டம்

28. பேராசிரியர் எஸ். நமச்சிவாயம்
முதல்வர்
நா.க.மா. கல்லூரி
பொள்ளாச்சி - 642 001

29. பேராசிரியர் பி. பாலசுப்பிரமணியன், (சிற்பி)
தமிழ்ப் பேராசிரியர்
நா.க.ம. கல்லூரி
பொள்ளாச்சி - 642 001

30. டாக்டர் பி.எஸ். சோமசுந்தரம்
தமிழ்த் துறைத் தலைவர்
வைணவக் கல்லூரி
அரும்பாக்கம்
சென்னை - 600 016

31. திரு. பா. இறையரசன்
துணைப் பேராசிரியர்
தமிழ்த் துறை
அ.வீ.வா.நி. திருபுட்பம் கல்லூரி
தஞ்சாவூர் - 613 503

V. பத்திரிகை ஆசிரியர்கள்

32. திரு ஐராவதம் மகாதேவன்
ஆசிரியர், தினமணி
எக்ஸ்பிரஸ் எஸ்டேட்
சென்னை - 600 002

33. டாக்டர் தா. பத்மநாபன்
ஆசிரியர், கலைக்கதிர்
6/48 அவிநாசி ரோடு
கோவை - 641 037

34. திரு. இரா. கிருஷ்ணமூர்த்தி
ஆசிரியர், தினமலர்
161, அண்ணா சாலை
சென்னை - 600 002

35. திரு. அ.மா. சாமி
ஆசிரியர்
ராணி வார இதழ்
1, கிரசண்ட் ரோடு
செனாய் நகர்
சென்னை - 600 030

36. திரு. இரா. முத்துக்குமாரசாமி
ஆசிரியர்
செந்தமிழ்ச் செல்வி
154, டி.டி.கே. சாலை
சென்னை - 600 018

37. திரு. மணவை முஸ்தபா
ஆசிரியர், சூரியர்
18, கிழக்கு ஸ்பர்டாங்கு சாலை
சென்னை - 600 031

38. திரு. கண. இராமநாதன்
ஸ்டார் பிரசுரம்
72, பெரிய தெரு
திருவல்லிக்கேணி
சென்னை - 600 005

VI. தமிழறிஞர்கள்

39. டாக்டர் அ.ச. ஞானசம்பந்தன்
19, டாக்டர் நடேசன் சாலை
அசோக்நகர்
சென்னை - 600 087

40. திரு. க.சச்சிதானந்தன்
42, பாந்தியன் சாலை
சென்னை - 600 008

41. திரு. சி. இலட்சுமணன்
முன்னாள் கல்வி இயக்குநர் (இலங்கை)
எண் 57, 25-5து குறுக்குத் தெரு
பெசன்ட் நகர்
சென்னை - 600 090

42. வித்துவான் டாக்டர் தி. முத்து-கண்ணப்பன்
அவ்வையகம்
9, 3-வது தெரு
பக்தவத்சலம் நகர்
சென்னை - 600 020

43. திரு. இராம. இருசப்பிள்ளை
தாயகம், தாமுநகர்
புலியகுளம்
கோவை - 641 045

44. டாக்டர் ஜே.ஜீ. கண்ணப்பன்
செண்பகம் இல்லம்
109, டாக்டர் இராதா கிருஷ்ணன் சாலை
சென்னை - 600 004

45. திரு. எஸ்.டி.காசிராசன்
கூடுதல் செயலர்
தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் துறை
சென்னை - 600 009

46. டாக்டர் சிலம்பொலி செல்லப்பன்
இயக்குநர்
தமிழ் வளர்ச்சிக் கழகம்
குறளகம்
சென்னை - 600 108

47. திரு. கொடுமுடி ச. சண்முகன்
செயற்பொறியாளர்
பொதுப்பணித் துறை
சேலம் - 636 007

48. டாக்டர் ஜி.ஜான் சாமுவேல்
இயக்குநர்
ஆசிய ஆய்வியல் நிறுவனம்
377, 10-வது குறுக்குத் தெரு
திருவான்மியூர்
சென்னை - 600 041

49. திரு. ஆர். பி. சுப்பிரமணியம்
தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்
இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ்
ஜி.எஸ்.டி. சாலை
சென்னை - 600 032

50. புலவர் வே. புகழேந்தி
தலைவர், தமிழ்நாடு தமிழாசிரியர் பேரவை
பொதுச்செயலர், தமிழ் எழுத்துச்சீர்திருத்த இயக்கம்
கமலம்மாள் இல்லம்
தந்தை பெரியார் நகர்
வேளச்சேரி அஞ்சல்
சென்னை 600 042

51. டாக்டர் கதிர் விஸ்வலிங்கம்
விரிவுரையாளர்
அழகப்பா தொழில்நுட்பக் கல்லூரி
அண்ணா பல்கலைக் கழகம்
சென்னை 600 025

841 x 1189

1189
3756
9512
99.19 4.9
7

880
440
1320

1230 x 880 x
984
984
10824

841
420
1261

625
312
937

625) 880 (1.4
625
2550
2500

841) 1189 (1.415
841
3480
3364
1260
841
4190
5

00226